# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. V Issue 2 May 2015

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்

பக்கம்

லைப் டிவைன் . . . . . . . . . . . . . 2

இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . 16

சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . 17

யோக வாழ்க்கை விளக்கம். . . . . . . 19

பூரணயோகம் - முதல் வாயில்கள் 23

அஜெண்டா . . . . . . . . . . . . . . . 25

சத்தியம் . . . . . . . . . . . . . . . . . . 27

மனிதன் கண்ட நீதியும் தெய்வம் வழங்கும் நீதியும் . . . . . . . . . . . 29

அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . . 38

அன்பர் அனுபவம் . . . . . . . . . . . 52

**அன்னை இலக்கியம்**

உள்ளத் திருக்கோயில். . . . . . . . . 58

**ஜீவியத்தின் ஓசை**

*லயம் பக்தியை யோகமாக்கும்.*

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

ஸ்ரீ அரவிந்தம்

## லைப் டிவைன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

ஆங்கிலம்: திருமதி லெஸ்லி ஜெக்கப்
தமிழ்: திருமதி வித்யா ரங்கன்
திருத்தம்: ஸ்ரீ கர்மயோகி

## XXVIII. Supermind, Mind and the Overmind Maya

Page 273
Para 3

If such intervening gradations exist, they must be superconscient to human mind.
The normal human mind does not seem to have any entry into these higher grades of being.
Man is limited in his consciousness by mind.
He is even hampered by a given range or scale of mind.

What is below his mind, submental or nether to his scale, readily seems to him subconscious.
It seems not distinguishable from complete inconscience.
What is above it is to him superconscious.
He is almost inclined to regard it as void of awareness.

He regards it as a sort of luminous Inconscience.
He is limited to a certain scale of sounds or of colours.

What is above or below that scale is to him inaudible and invisible.
In the same way it is with his scale of mental consciousness.



## 28. சத்திய ஜீவியம், மனம், தெய்வீக மனத்தின் மாயை

இதுபோன்ற இடைப்பட்ட நிலைகள் இருந்தால் அவை மனித மனத்திற்கு அப்பாற்பட்டவையாக இருக்க வேண்டும்.
சாதாரண மனித மனம் ஜீவனின் இந்த உயர்ந்த நிலைகளில் நுழைய முடியாதது போல் தெரிகிறது.
மனிதனின் ஜீவியம் மனத்தால் வரையறுக்கப்பட்டுள்ளது.
மனத்தின் அளவு அல்லது எல்லை மனிதனுக்குத் தடையை ஏற்படுத்துகின்றது.
மனத்தின் கீழுள்ள நிலைகள் அவனுக்கு ஆழ்மனமாகத் தெரிகின்றன.
அது ஜட இருளிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாமல் உள்ளது.
மேலுள்ளவை அவனுக்கு அவன் ஜீவியத்தைக் கடந்தவை.
புரிந்து கொள்ள முடியாத சூன்யமாக அதை அவன் கருத விழைகிறான்.
பிரகாசமான ஆழ்ந்த நிலையாக அதை அவன் எண்ணுகிறான்.
ஓரளவுக்குட்பட்ட நிலைக்குரிய ஒலிகளும் வண்ணங்களும் அவனுக்குப் பரிச்சயம்.
அந்த அளவுக்கு மேல் அல்லது கீழுள்ளவை அவனுக்குக் கேட்காது, பார்வைக்குப் புலப்படாது.
இதைப் போலவே அவனுடைய ஜீவியத்தின் அளவும் உள்ளது.

It is confined at either extremity by an incapacity.

That marks his upper and his nether limit.
He has no sufficient means of communication even with the animal.
The animal is his mental congener, though not his equal.

He is even capable of denying mind or real consciousness to animals.
This is because its modes are other and narrower than those with which he is familiar.

He can observe submental being from outside.

But he cannot at all communicate with it. Or enter intimately into its nature.

Equally the superconscious is to him a closed book.

It may well be filled only with empty pages.
It seems as if he had no means of contact with these higher gradations of consciousness.
If so, they cannot act as links or bridges.

His evolution must cease with his accomplished mental range and cannot exceed it.
Nature in drawing these limits has written finis to his upward endeavour.



ஏதாவது ஒரு இறுதி முனையில் இயலாமையால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
இது அதன் உயர்ந்த மற்றும் தாழ்ந்த எல்லையாகும்.
அவனுக்கு விலங்குகளோடும் தேவையான அளவு தொடர்புக்கான வழி வகை இல்லை.
விலங்கு அவனுக்குச் சரிசமமாக இல்லாவிடினும் மனத்தைப் பொறுத்தவரையில் ஒரே இனத்தைச் சேர்ந்தது.
அவன் விலங்குகளில் செயல்படும் மனத்தையும் ஜீவியத்தையும் மறுக்கலாம்.
ஏனென்றால் அவைகளின் செயல்படும் விதம் மாறுதலாகவும், குறுகியதாகவும் அவன் புரிந்து கொள்ளும் நிலையிலிருந்து வேறுபட்டும் உள்ளது.
தாழ்ந்த மனத்தின் ஜீவன்களை வெளியிலிருந்து அவனால் காண முடியும்.
ஆனால் அவனால் அவைகளுடன் தொடர்பு கொள்ள முடியாது. அல்லது அவைகளின் இயல்போடு நெருக்கமாக இணைய முடியாது.
அதே போல் அவனைக் கடந்த உயர் நிலையிலுள்ள பரமாத்மாவும் அவனுக்கு ஒரு மூடிய புத்தகம் போன்றது.
அதை அவனால் காலியான பக்கங்களாகவே நிரப்ப முடியும்.
உயர்ந்த நிலையிலான ஜீவியத்தோடு அவன் தொடர்பு கொள்ள வழிவகை இல்லை என்று தெரிகிறது.
அப்படியானால், அவை இணைக்கும் கருவிகளாகவோ அல்லது பாலங்களாகவோ செயல்பட முடியாது.
அவனுடைய பரிணாமம் மனத்துடன் முடிவுக்கு வரும், அதைக் கடக்க முடியாது.
இயற்கை இவ்வரையறைகளை ஏற்படுத்தி மனிதனின் மேல்நோக்கிச் செல்லும் பாதையை அடைத்து வைத்துள்ளது.

Page 274
Para 4

When we look more closely, we perceive that this normality is deceptive.
In fact there are several directions in which human mind reaches beyond itself.
It can tend towards self-exceeding.
It does so through lines of contact or veiled passages.

These passages connect it with higher grades of consciousness.
They are grades of the self-manifesting Spirit.
First, we have noted the place Intuition occupies in the human means of knowledge.
Intuition is in its very nature a projection of the action of these higher grades.
The action is projected into the mind of Ignorance.
It is true that in human mind its action is largely hidden.

It is hidden by the interventions of our normal intelligence.

A pure intuition is a rare occurrence in our mental activity.

For what we call by the name is usually a point of direct knowledge.
That point is immediately caught and coated over with mental stuff.



இதை இன்னும் தெளிவாக நோக்கினால், இயற்கையின் இச்செயல் மாயையானது என்பதை நாம் உணரலாம்.
உண்மையில் மனித மனம் தன்னைக் கடந்து செல்லும் திசைகள் பல உண்டு.
தன்னைக் கடக்கும் முயற்சியை அது எடுக்க முடியும்.
அது தொடர்புக்கான வழிகள் அல்லது திரையான பாதைகள் மூலம் இதைச் செய்கிறது.
இப்பாதைகள் அதை உயர்நிலை ஜீவியத்தோடு இணைக்கும்.

அவை ஆன்மாவின் சுய வெளிப்பாட்டிற்கான நிலைகள்.
முதலில் நாம் மனிதனுக்குண்டான அறிவில் உள்ளுணர்வு என்பதன் இடத்தைக் கண்டோம்.
உயர்நிலைகளின் செயல்பாட்டினால் எழுவது உள்ளுணர்வு.

அஞ்ஞானத்தினுள் இச்செயல் எழுப்பப்படுகிறது.
நம் மனத்தில் இச்செயல் வெகுவாக மறைந்துள்ளது என்பது உண்மை.
நம் சாதாரண அறிவின் இடையீட்டினால் அது மறைக்கப்பட்டுள்ளது.
மனத்தின் செயல்பாட்டில் தூய உள்ளுணர்வு எழுவது அபூர்வமான நிகழ்வாகும்.
உண்மையில் இது நேரடி ஞானத்தின் ஒரு பகுதி.

அப்பகுதி எழுந்ததும் நம் மனம் அதை ஆக்கிரமித்துக் கறைப்படுத்துகிறது.

It serves only as an invisible or very tiny nucleus of a crystallisation.
It is in its mass intellectual or otherwise mental in character.
Or else the flash of intuition is quickly replaced or intercepted.
Before it has a chance of manifesting itself it is quickly replaced.
It is replaced by a rapid imitative mental movement, insight or quick perception.

This swift process of thought owes its appearance to the stimulus of the coming intuition.
But it obstructs its entry or covers it with a substituted mental suggestion.
The suggestion may be true or erroneous.

But in either case it is not the authentic intuitive movement.
Even so, this intervention from above shows a connection.

This connection is between mind and what is above it.

Behind all our original thinking there is a veiled, a half-veiled intuitive element.
This fact is enough to establish a connection between mind and what is above it.
It opens a passage of communication.

It opens an entry into the superior spirit ranges.



அதனால் அது கண்ணுக்குத் தெரியாத அல்லது மிகச் சிறிய ஒரு கருவளவு மட்டுமே நமக்கு உதவுகிறது.
அது திரண்ட அறிவுத்திறனாகவோ அல்லது மனமாகவோ உள்ளது.
அல்லது மின்னலாகத் தோன்றும் உள்ளுணர்வு இடைமறிக்கப்படுகிறது.
அது வெளிப்படும்முன் உடனடியாக மாற்றப்படுகிறது.
விரைவாக ஒன்றைப் பின்பற்றி எழும் போலியான மனத்தின் செயல், நுண்ணறிவு அல்லது விரைவாகப் புரிவதாக அது மாற்றம் பெறுகிறது.
இவ்வாறாக எண்ணம் க்ஷணத்தில் தோன்றி வெளிப்படுவது உண்மையில் உள்ளுணர்வின் தூண்டுதலால் நடைபெறுவது.
ஆனால் எண்ணம் அதைத் தடை செய்து அதை மனத்தின் கருத்தாக மாற்றுகிறது.
உள்ளுணர்வு மனத்தின் கருத்தாக வெளிப்படும்போது அது சரியாகவோ, தவறாகவோ இருக்கும்.
எப்படியானாலும், அது மெய்யான உள்ளுணர்வின் செயல் அல்ல.
இருப்பினும், மேலிருந்து எழும் இந்த இடையீடு ஒரு தொடர்பைக் குறிக்கிறது.
இத்தொடர்பு மனம் மற்றும் அதன் மேலுள்ளதன் இடையே ஏற்படுவது.
நம் எல்லா அடிப்படையான எண்ணங்களுக்குப் பின்னால் திரையாக, பாதி மறைந்துள்ள உள்ளுணர்வின் பகுதி உண்டு.
இவ்வுண்மை மனம் மற்றும் அதன் மேலுள்ளதன் இடையே உள்ள தொடர்பை நிரூபிக்கப் போதுமானது.
அது இரண்டுக்கும் இடையே கருத்துப் பரிமாற்றத்திற்கான வழியைத் திறக்கிறது.
உயர்ந்த ஆன்மீக நிலைகளில் நுழையக் கூடிய திறப்பை ஏற்படுத்துகிறது.

There is also the reaching out of mind to exceed the personal ego limitation.
It reaches out to see things in a certain impersonality and universality.
Impersonality is the first character of cosmic Self.
Universality is non-limitation by the single point of view.

It is the character of cosmic perception and knowledge.

This tendency is therefore a widening.
Even though rudimentary, it is a widening of these restricted mind areas.
It is a widening towards cosmicity.
It is a widening towards a quality which is the very character of the higher mental planes.
It is a widening towards that superconscient cosmic Mind.

It must in the nature of things be the original mind-action.
Our mind action is only a derivative and inferior process of it.
Again, there is not an entire absence of penetration from above into our mental limits.
The phenomena of genius are really the result of such a penetration.
It is veiled no doubt,
It is veiled because the light of the superior consciousness acts within narrow limits.
It usually acts in a special field.



மனத்திலிருந்து உயர்ந்து தனிப்பட்ட அகந்தையின் வரையறையைக் கடக்கும் திறனும் அங்கு உண்டு.
உயர்ந்து அதன் வழியாக பொதுவான, பிரபஞ்ச பார்வையைப் பெறும் முயற்சி அது.
பிரபஞ்ச ஜீவனின் முதல் இயல்பு பொதுத்தன்மை பெறுவது.
பிரபஞ்சமயமாதல் என்பது ஒற்றைப் பார்வைக் கோணத்தின் வரையறை அகலுவது.
இது பிரபஞ்சத்தை நாம் உணர்வது மற்றும் பிரபஞ்ச ஞானம் பெறுவதன் தன்மை ஆகும்.
ஆகவே, இம்மனோபாவம் பரந்த நிலையை அடைவது.
இது அடிப்படையான ஆரம்ப நிலைக்குரியதானாலும், குறுகிய மனத்தின் பகுதிகள் விஸ்தீரணம் அடைவதாகும்.
இது பிரபஞ்ச அளவிற்குப் பரந்து விரிவது.
இத்தன்மை உயர்ந்த மன நிலைகளின் குணத்தைப் பெறும் அளவிலான முயற்சியாகும்.
இவ்விஸ்தீரணம் பரமாத்மாவின் பிரபஞ்ச மனத்தை நோக்கியது.
மூலமான மனத்தின் செயல்பாடாக உள்ளது அது.
நம் மனத்தின் செயல் என்பது அதிலிருந்து தோன்றிய ஒரு கீழ்நிலைப் படைப்பு.
இருந்தாலும், நம் தாழ்ந்த மனத்தில் உயர்ந்ததன் ஊடுருவல் இல்லாமல் இல்லை.
அவ்வூடுருவல் மேதைகளை உருவாக்குகிறது.

அது திரையானது,
உயர்ந்த ஜீவியத்தின் ஒளி குறுகிய வரையறைக்குட்பட்டு செயல்படுவதால் அது மறைவாக உள்ளது.
அதன் செயல்படும் அரங்கம் விசேஷமானது.

It acts without any regulated separate organisation of its characteristic energies.
It often acts indeed quite fitfully and erratically.
It acts with a supernormal or abnormal irresponsible governance.
Also in entering the mind it subdues and adapts itself to mind substance.
Thus, it is only a diminished dynamis that reaches us.
It is not all the original divine luminosity.
That luminosity might be called the overhead consciousness beyond us.
Still the phenomena of inspiration and revelatory vision are there.
Their origin is unmistakable
Intuitive perception, intuitive discernment, surpass our less illumined normal mind-action.
Finally, there is the vast field of mystic and spiritual experience.
Here the gates already lie wide open.
They are open to the possibility of extending our consciousness beyond its present limits.

They are open, unless, indeed, we turn away from their vistas.
We may do so by an obscurantism that refuses to inquire.

Or we may be attached to our boundaries of mental normality.



அதன் தனிச் சிறப்பான சக்திகள் ஒழுங்கும் தனித்த அமைப்புகள் இன்றியும் செயல்படும்.
அது தொடர்ச்சியற்ற, ஒழுங்கற்ற செயல்பாட்டைக் கொண்டது.
சாதாரண நிலையைக் கடந்த அல்லது அசாதாரணமான பொறுப்பற்ற முறையில் அது செயல்படுகிறது.
மனத்தில் நுழையும்போது அது தன்னை அடக்கி மனத்தின் பொருளுக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்கிறது.
ஆக, அது குறைக்கப்பட்ட திறனாக நம்மை வந்தடைகிறது.
மூலமான தெய்வீகப் பிரகாசத்தை அது இழந்துள்ளது.
அப்பிரகாசத்தை நம்மைக் கடந்த நிலையிலுள்ள உயர்ந்த ஜீவியம் எனலாம்.
இருந்தாலும், அக ஊக்கம் மற்றும் ஞான வெளிப்பாட்டின் காட்சி அங்கு உண்டு.
அதன் ஆதி தவறற்றது.
உள்ளுணர்வு புரிதல், உள்ளுணர்வைப் பிரித்தறிதல் இவை நம் தாழ்ந்த சாதாரண மனத்தின் செயல்பாட்டை மீறியவை.
முடிவாக, இறை உணர்வு மற்றும் ஆன்மீக அனுபவங்களுக்கான பெரிய களம் உள்ளது.
இங்குக் கதவுகள் ஏற்கனவே திறந்து உள்ளன.
நம் ஜீவியத்தை அதன் வரையறைகளைத் தாண்டிய நிலையில் விரிவுபடுத்தும் சாத்தியம் உள்ளது என்பதைக் குறிக்குமாறு அவை திறந்துள்ளன.
அதன் பரந்து விரிந்த பரப்பிலிருந்து நாமாக விலகினாலொழிய, அவை திறந்தே உள்ளன.
எதுவும் விளங்காத நிலையில் நாம் ஆராய்ச்சியை மேற்கொள்ளாமல் இருக்கலாம்.
அல்லது நாம் நம் மனத்தின் வரையறைகளோடு ஒன்றியிருக்கலாம்.

In this way we may shut the gates.
But in our present investigation we cannot afford to neglect the possibilities.
These domains of mankind's endeavour bring possibilities near to us.
They bring added knowledge of oneself.

They bring the knowledge of the veiled Reality.

It is their gift to human mind.
It is the greater light which arms them with the right to act upon us.
It is the innate power of their existence.

Contd...

**ஜீவிய மணி**

*அதிர்ஷ்டம் எங்கே இருக்கிறது?*

*அதிர்ஷ்டம் முயற்சியில் இருக்கிறது. முயற்சி என்பது உடலைவிட உணர்வுக்கும், அறிவுக்கும், ஆன்மாவுக்கும் பெரும் பலனைத் தரும். சத்திய ஜீவிய முயற்சி ஆன்மாவைக் கடந்தது. திருவுருமாற்றம் சத்திய ஜீவிய முயற்சி. திருவுருமாற்றத்தைத் தொடங்க உதவும் நிலைகள் தாழ்ந்தவை. உலகின் தாழ்ந்த நிலைகளில் அதிர்ஷ்டத்தின் இரகஸ்யம் உள்ளது.*

**தாழ்ந்ததை உயர்த்தும்பொழுது பலன் அபரிமிதமாக வரும் என்ற தத்துவத்தை மனமும், உணர்வும் ஏற்கவேண்டும்.**



அப்படிச் செய்வது நாமே அக்கதவுகளை அடைப்பதாகும்.
ஆனால் தற்போது நாம் மேற்கொண்டுள்ள விசாரணையின்படி, உருவாகியுள்ள வாய்ப்புகளைப் புறக்கணிப்பது சரியன்று.
மனிதகுல முயற்சி கண்டறிந்த இந்த அரங்கங்கள் வாய்ப்புகளை நம் அருகில் கொண்டுவரத்தக்கன.
நம்மைப் பற்றிய கூடுதலான அறிவை அவை நமக்கு அளிக்கின்றன.
மறைபொருளான சத்தியத்தின் ஞானத்தை அவை நமக்குத் தருகின்றன.
இது மனித மனத்திற்கு அவை தரும் பரிசு.
மேலேயுள்ள ஜோதி நம்மீது செயல்படும் உரிமையை இவைகளுக்குத் தருகிறது.
இந்தச் சக்தியை அவை தங்கள் உள்ளார்ந்த இயல்பாகப் பெற்றுள்ளன.

தொடரும்...

**ஜீவிய மணி**

*குடும்பம் கொடுமைப்படுத்துவதாலும், சமூகம் அநீதி இழைப்பதாலும், வாழ்வு துரோகம் செய்வதாலும் மனிதன் கஷ்டத்திற்கு உள்ளாகிறான். இது வந்தபின் பொதுவாக 10, 20 ஆண்டுகள் அல்லது ஒரு தலைமுறை, அவற்றை அனுபவிக்கிறான். அனுபவித்தபின் தன்னை அறியாமல் தெளிவு ஏற்பட்டு முயற்சியைச் சரியான பாதையில் செலுத்திப் பலன் பெறுகிறான். ஸ்ரீ அரவிந்தம் கூறும் ஞானம் இருந்தால், இதுபோன்ற சிரமம் வந்தவுடன் இது அதிர்ஷ்டத்தின் வாயில் எனப் புரிந்து தன் முயற்சியைச் சரியான பாதையில் எடுத்தால், அதிர்ஷ்டம் இப்பொழுதே வரும்.*

## இம்மாதச் செய்தி

# யோகம் பயிற்சிக்குரியதல்ல.
# பக்குவம் பவித்திரமானது.





**Page 172: Make the abysm a road for Heaven's decent**
**பாதாளத்துள் பரமண்டலத்தைக் கொணர்ந்து**

✡ உயர்ந்த ஒளியை ஆழத்துள் பதித்து

✡ புதிரான நெருப்பு இருளைப் பிளந்தது

✡ மீண்டும் பிறப்பிடையே எடுத்த பெருமுயற்சி

✡ ஆபத்தான பார்வை வழியே, கனத்த அசைவு

✡ அடுத்த உலக குழப்பத்தூடே பாதை வகுத்து

✡ ஒளியிழந்த முகங்களிடையே, வலிமையுள்ள சிறு தெய்வங்கள்

✡ விரைந்தோடும் பிசாசுகளின் முணுமுணுப்பு எழுப்பும் கேள்வி

✡ நயமாக விரையும் சக்தியின் சாகஸத்தால் முற்றுகையிடப்பட்டு

✡ புது உலகு வழியே வழி தெரியாமல் நடப்பவர் போல

✡ எங்கு போகிறோமென அறியாமல், எந்த நம்பிக்கையுமின்றி

✡ அடிதவறும் பூமியில் பாதையை நாடி

✡ கல்லென உறுதிபூண்டு அழியும் முடிவை நாடி

✡ மறையும் வழி பின்தொடர

✡ விவரமற்ற பெருவெளியின் மினுமினுக்கும் புள்ளிகள்

✡ உடலில்லாமல் முணுமுணுக்கும் ஓசை உடன் வந்தது

✡ அடிபட்ட கவலை ஒளியைக் குறை கூறியது

✡ அசையாத அதன் நெஞ்சம் பெரிய தடை

✡ கவனிக்கும் மங்கிய பார்வை அசைவதால் பெருகியது

✡ உயிரற்ற கண்கள் உற்று நோக்க எதிர்ப்பின் தொகுப்பு

✡ மரணஸ்பரிசம் இருளாகப் பிரகாசித்தது

✡ இறந்த பேயின் ஒளி சூழும்படி

✡ தவறான வழிகாட்டும் நிழலுருவங்கள் நிறைந்த

✡ இருண்ட அளவற்ற ஜட இருளின் குகை விவரமற்றது

✡ தன் ஆத்ம சுடரே அவனறிந்த சூரிய ஒளி

## ஜீவிய மணி

*நாம் சந்திக்கும் நிகழ்ச்சி, கடமை, செயல் ஆகியவற்றைவிட நமக்கு வலிமை குறைவானால் தோல்வி ஏற்படுகிறது. புறநிகழ்ச்சிகள் அவற்றைப் பிரதிபலிப்பதால் அவை பொருட்டல்ல. நாம் என்பது மனம். எக்காரணத்தாலோ, மனம் ஈடுபாடு இல்லை எனில், வலிமை இல்லை எனில் நஷ்டமோ, தோல்வியோ ஏற்படுகிறது. இதுவே ஆன்மீக, மனோதத்துவ உண்மை. அன்று புரியவில்லை, பிடிக்கவில்லை, ஈடுபாடு இல்லை, வலிமை இல்லை. இன்று அது புரிந்தால், பிடித்தால், ஈடுபாடு இருந்தால், வலிமை இருந்தால் என்ன நிலைமை? நஷ்டப்பட்டவர் இன்று ஆசையால் நஷ்டப்பட்டேன் என்ற அறிவு பெற்றால் என்ன வரும்? அறிவு வரும். இனி அதுபோன்ற நஷ்டம் வராது. இதை புத்திக் கொள்முதல் என்பார்கள். பொறாமையால் கொலை செய்தேன்; அவசரப்பட்டு முதலை இழந்தேன்; நண்பனை நம்பி ஏமாந்து போனேன் என்பவர்கள் இன்று பொறாமையைக் கைவிட்டால், அவசரம் தவறு என்று உணர்ந்தால், இனி ஏமாற மாட்டேன் என்றால் மனம் நிம்மதி அடையும். போகிற கதி நல்ல கதியாகும். இந்த அறிவுக்கு இழந்ததைப் பெற்றுத் தரும் திறன் இல்லை.*

**அன்னைக்கு இம்மனமாற்றம் வேறு;
இழந்ததைப் பெற்றுத் தரும்.**



## யோக வாழ்க்கை விளக்கம்

**22/19. நிஷ்டை பிரம்மத்தை உள்ளே எட்டி மீண்டும் வெளியே பிரம்மத்தைக் கண்டால், சமர்ப்பணம் பலிக்கும்.**

- சமர்ப்பணம் ஒரு போதும் பலிக்கத் தவறியதில்லை. *தவறுவது சமர்ப்பணமில்லை.*
- உலக வாழ்வில் அனைவரும் செய்யும் வேலை ஒருவகையில் அவனுள்ள நிலையில் சமர்ப்பணமாகும்.
- *செயலை இறைவனுக்கு அர்ப்பணம் செய்வது சமர்ப்பணம்.*
- அன்னை நமக்கு இறைவனாவதால், நாம் அன்னைக்குச் சமர்ப்பணம் செய்கிறோம்.
- சுதந்திர இயக்கத்தில் இதந்தரும் மனையினீங்கி இடர்மிகு சிறைப்பட்டவர் பாரதமாதாவுக்கு வாழ்வை சமர்ப்பணம் செய்தனர்.
- தகப்பனார் இறந்தபின் தம்பிகளைப் படிக்க வைத்துத் தங்கைகளைத் திருமணம் செய்யும்வரை திருமணம் செய்யாமலிருந்தவர் செய்தது சமர்ப்பணம். குடும்பத்திற்கு அவர் தன் செயலை, வாழ்வை துறப்பதை சமர்ப்பணம் செய்தார்.
- பொய் சொல்லித் திட்டுபவனுக்கு பதிலிறுக்காமலிருப்பது பொறுமைக்குச் செய்யும் சமர்ப்பணம்.
- சிறு பிரார்த்தனை முதல் பெருயோக சித்திவரை அனைத்தையும் சமர்ப்பணம் செய்யலாம்.
- ஒரு அளவில் சமர்ப்பணம் தவறினால், அடுத்த அளவில் பலிக்கும்.
- *வாரம் ஒருமுறை சாப்பிடும் விசேஷ சாப்பாட்டை இருமுறையாகச் சாப்பிட விரும்பியவர் கேட்கவில்லை.*
  இது போல் நினைப்பது சாப்பாட்டை விரும்புவதாகும் என அதை மறந்து விட்டார். மாதம் பல கடந்தன. விசேஷ சாப்பாடு, இருமுறையாக மாறியது.

*நினைப்பதும் சரியில்லை என்பது நம்மையறியாமல் செய்த சமர்ப்பணமாகிறது.*

- தியானம், நிஷ்டை முடிவான உயர்வுள்ளவை.

  அவை எந்த நிலையைச் சேர்ந்ததென்றாலும் உள்ளே மட்டும் போகும்.

  உள்ளே போனால் பிரம்மத்தைக் காணலாம்.

  வெளியே வந்தால் சமர்ப்பணம் பலிக்கும்.

- *சமர்ப்பணத்தைத் தீவிரமாக ஏற்றவருக்கு சமர்ப்பணமே பிரம்மம்.*

- அன்னையை ஆழ்ந்து ஏற்றவருக்கு அன்னை நினைவே சமர்ப்பணம்.

  சமர்ப்பணம் என அவர் செய்வது தேவையில்லை.

- ‘‘ஏன் என்னால் உங்களை நினைக்க முடியவில்லை’’ என அன்னை பகவானைக் கேட்டபொழுது ‘‘என்னோடு ஐக்கியமானபின் எப்படி நினைப்பது? என்னை நினைப்பது என்னை நினைப்பதாகாது. நினைப்பவர் தன்னையே நினைப்பதாகும்’’ என்று பகவான் பதில் கூறினார்.

- பிரம்மத்தைக் கண்டபின் வெளிவந்து சமர்ப்பணம் பலிப்பது *வாழ்வில் பிரம்மம் பலிப்பதாகும்.*

- *ஈடுபாடு முழுமையாகி, நம் செயல் அன்னை செயலாவது சமர்ப்பணம்.*

- கிராமம்தோறும் திரௌபதி அம்மன் திருவிழாவில் தீ மிதிப்பதுண்டு.

- தீ மிதிப்பவருக்கு நெருப்பு காலில் சுடாது, புண்ணாகாது.

- தீயைத் தெய்வமாகக் கருதி 48 நாட்கள் விரதமிருப்பதால், பக்தரும் தீயும் ஒன்றாகி தீ சுடுவதில்லை.

- எலக்ட்ரிக், எலக்ட்ரானிக்ஸ் வேலை செய்பவர்கட்கு ஷாக் அடிப்பது வழக்கமாகி, ஷாக் பாதிப்பதில்லை.



- செயலும், மனமும், ஜீவனும் எலக்ட்ரிசிட்டியிலிருப்பதால் அவர்களில் சிலர் எலக்ட்ரிசிட்டியுடன் ஐக்கியமாகி விடுவார்கள்.

  அவர்கள் ஷாக் அடிப்பதை ரசிப்பதும் உண்டு. ஷாக் பலமாக இல்லையென கையை ஈரமாக்கி அதிக ஷாக் பெற்று ஆனந்தப்படுவதும் சிலர் வழக்கம்.

- நம்மூர் கரண்ட் 220 வோல்ட். அமெரிக்காவில் கரண்ட் 90 வோல்ட்.

  சில நாடுகளில் 110 வோல்ட். கம்ப்யூட்டரில் வேலை ஆறு வோல்ட்டில் நடக்கும்.

  தெரு முனையில் உள்ள டிரான்ஸ்பார்மரில் 440 வோல்ட் கரண்ட் உண்டு.

  பெரிய டிரான்ஸ்பார்மரை சுற்றி இரும்பு வேலி போட்டு, ‘அபாயம்’ என எச்சரித்து எழுதியிருப்பார்கள். அங்கு கரண்ட் 4000 வோல்ட்க்கு மேலிருக்கும்.

  நெய்வேலியில் கரண்ட் உற்பத்தியாகுமிடங்களில் வோல்டேஜ் 20,000, 40,000 என இருக்கும். அங்கெல்லாம் சிறு தவறு நடந்தாலும் உயிர் உடல் சாம்பலாகும்.

- **Steve Wozniak** என்பவர் **Steve Job**-உடன் வேலை செய்த எலக்ட்ரானிக் இன்ஜினீயர்.

  ஒரு சமயம் 25,000 வோல்ட் ஷாக்கடித்து விட்டது.

  அவரைத் தூக்கி 25 அடி தூரம் தள்ளிப் போட்டு விட்டது.

  *உயிருக்கு ஆபத்தில்லை.*

  அவர் உயிரையே எலக்ட்ரானிக்ஸுக்குச் சமர்ப்பணம் செய்து அதனுடன் ஒன்றியவர் என்பதால் எலக்ட்ரிசிட்டி அவர் உயிரை எடுக்கவில்லை. இது ஒரு வகை *உயர்ந்த சமர்ப்பணம்.*

  *உடலளவில் ஒன்றிய சமர்ப்பணம்.*

- அன்னை சிறுமியாக இருந்தபொழுது ஒரு சிறு குன்றின்மீது ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தார். ஓடிய வேகத்தில் முனையைக் கடந்து பள்ளத்தில் விழுந்து விட்டார். அது 40 (அல்லது) 50 அடி பள்ளம். ஆபத்து. அவர் உடல் மெதுவாக

இறங்கித் தரையில் வந்த பொழுது தன்னை யாரோ தாங்கிப் பிடிப்பதை அறிகிறார்.

*அன்னையின் உடலும் சமர்ப்பணமான உடல்.*

தெய்வம் அவருள்ளும் புறமும் அரவணைப்பான சூழலாக இருந்தது. சமர்ப்பணம் என்பதை நினைக்கவுமில்லை என்றாலும் சமர்ப்பணம் செயல்படும்.

- மீராவுக்கு ராணா விஷம் கொடுத்தான். விஷத்தைக் குடித்து விட்டாள். விஷம் ஒன்றும் செய்யவில்லை, பக்தியின் ஆன்மீக சக்தி விஷத்தை முறித்து விட்டது.

  மீராவின் நினைவு, உணர்வு, நெஞ்சம் முழுவதும் கிருஷ்ணனுக்குரியது. *உணர்வு நிறைந்து உடலை பக்தியாக நிரப்பியது.* உணர்வின் பக்தி உடலையும் பக்திமயமாக்கியது. பக்தி உணர்வின் சமர்ப்பணம்.

  நினைவு அறிவின் சமர்ப்பணம், மனத்தின் சமர்ப்பணம். செயல் உடலின் சமர்ப்பணம். *சமர்ப்பணமான உடல் தெய்வீகமானது. அதைத் தீண்டும் விஷம் தெய்வீகம் பெறுகிறது.* தெய்வீகம் தெய்வீகத்தைப் பாதிக்காது.

  அதுவே சமர்ப்பணத்தின் தத்துவம்.

  *பிரம்மம் வெளிவந்து செயலில் வெளிப்படுவது சமர்ப்பணம்*

  *என்றால் அது பிரம்ம ஜனனம், பிரம்ம சமர்ப்பணம்.*

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஆன்மா மற்ற கரணங்களிலிருந்து பிரிந்து மோட்சம் அடைவது சுயநலம். அதைத் தவிர்த்து மற்ற கரணங்களில் தங்கி அவற்றின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு உழைப்பது திருவுருமாற்றம். பல பேருடன் பிறந்தவன் படித்து முடித்து வேலை கிடைத்தபின் குடும்பத்திற்காக உழைப்பது அது போன்றது.



## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### 112. அழைப்பின் ஆன்மீக அம்சம்

- அன்பர்கள் அழைப்பை அறிவார்கள். அது நாம் அன்னையை நம் பிரச்சனையைத் தீர்க்க அழைப்பது. அது சொல்லற்ற பிரார்த்தனை.
- ஆத்மா அன்னையை விழைவதால் எழும் குரல் அழைப்பு.
- அதுவும் சொல்லானால் மேலெழுந்தவாரியாக எழுவது.
- சொல்லழிந்த அழைப்பு மௌனம் தரும் அழைப்பு.
- சொல் மறைந்து தானே குரல் எழுந்து அழைப்பு உருவானால் மனம் ஈடுபட்ட காரியம் உடனே பூர்த்தியாகும். காதல் வயப்பட்டவனுக்குக் காதலி எதிரே தோன்றுவாள். *பெண் குரல் நேரடியாகத் திருமணத்தில் முடியும்.*

  30 ஆண்டுகள் தொண்டராக இருந்தவர்க்குத் தலைவர் பதவி வரும்.

  வேலையில்லாதவர்க்கு பல வேலைகள் தேடி வரும்.

  மாற்றாம் தாயாரிடம் வளர்பவர்க்குத் தாயன்பு தாராளமாக எழும்.

  *சொல்லிருந்த அளவில் உள்ள அத்தனை பிரச்சனைகளும் வாய்ப்பாகும்.*

  சைக்கிள் வாங்க முடியாதவனுக்கு மோட்டார் பைக்கைத் தாண்டி கார் வரும்.

- அதே அழைப்பு நம்மைக் கடந்து அன்னை உள்ளிருந்து அழைப்பதானால்

  **அது பூரண யோக தீட்சையாகும்.**

  சூட்சும உலகில் அன்னை அன்பரைத் தம் இதயத்துள் ஏற்பதாகும்.

- பகவான்முன் **March** 29, 1914 அன்று அன்னை தரையில் உட்கார்ந்து ரிச்சர்ட்டுடன் பகவான் பேசுவதைக் கேட்ட-பொழுது அவர் மனநிலை அப்படியிருந்தது. அன்று அன்னை கீதை யோகத்தை முடித்தவர். கிருஷ்ணாவதார-மானவர். அவர் பெற்றது முடிவான மௌனம். கடைசிவரை அவருடனிருந்தது. 'உலகம் இருளில் மூழ்கியிருந்தாலும் பகவானிருப்பதால் திருவுள்ளம் நிறைவேறும்' என அன்னை எழுதிய நாள் அது.
- நம் மனம் சொல்லையிழந்தால் அன்னை அங்கிருந்து நம்மை அழைப்பார். அவர் பெற்ற மௌனம் நம் மனம் பெறும். அன்பர் அந்நேரம் சாதகராவார். **Sincerity** உண்மை, அதுவும் ஆன்மீக உண்மை, அன்னையைப் பெறும் உண்மை எது என மனம் அறிந்து ஆத்மாவுக்கு அறிவிக்கும். **Sincerity** உண்மை சரணாகதியை விரும்பினால் அவருக்கு யோகம் பலிக்கும். மரணம் அழியும். அன்னை நெஞ்சையடைந்து அங்கேயே தங்கும் யோக பாக்கியம் கிடைக்கும்.
- பூரண யோகம் செய்தால் பூரணமாகப் பலிக்கும் சித்தி மனத்தை எட்டி ஆத்மாவில் உதித்து, அது சைத்திய புருஷனை எட்டி மேல்மனத்தில் அழைப்பாக மாறுவது, ஒருவர் உலகத்தின் சார்பாக அன்னையைப் பூவுலகத்திற்கு அழைப்பதாகும். அது பொன்னான நேரம்.

**பொன்னொளியாகப் பகவான் பிரகாசிக்கும் தருணம்.**

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஆத்மா ஆதி, அந்தம், மாற்றம், வளர்ச்சி அற்றது என்பது மரபு. பகவான், அது வளர்கிறது; அதற்காகவே பல பிறவிகள் எடுக்கிறது என்கிறார். நாமும் உடல், உயிர், மனத்தை விட்டு அகன்று சத்தியத்தை நாடுவது அதன் பிரதிபலிப்பு.



## அஜெண்டா

### Mother பகவான் சிம்பல் செய்தார்

Volume III, page 454

- **Mother** பாரிசில் ஒரு சங்கத்தில் மெம்பராக இருந்தார். அதன் பெயர் **Cosmic Consciousness** பிரபஞ்ச ஜீவியம்.
- **Mother**-உடைய பெற்றோர்கள் கடவுள் நம்பிக்கையில்லாதவர்.
- **Mother**-க்கு ஒரு சகோதரன் உண்டு. அவர் மடகாஸ்கர் கவர்னராக இருந்தார்.
- அவர் ஆற்றில் நீந்தும்பொழுது ''உனக்கு இறைவனாக வேண்டுமா?'' எனக் குரல் கேட்டது. ''அது தேவையில்லை'' என்று அவர் கூறினார்.
- பாரிஸ் சங்கத்தில் ஒருவர் வந்து பேசினார். முடிவாக 'ஓம்' என்று கூறி முடித்தார்.
  *அந்த ஹால் முழுவதும் 'ஓம்' என்ற ஒலியால் பொன்னிறமாகி விட்டது.*
- **Mother** தன் தியானத்தில் கண்ட பலரில் கிருஷ்ணா ஒருவர். இவர் கரிய நிறமாக ஆசியர் உருவமானவர். **Mother** இவரை வாழ்வில் காண முயன்றார்.
- தியான் என்பவர் (தியான் என்றால் கடவுள் எனப் பொருள். சாமி என நம்மூரில் கூறுவது போல்) போலந்து நாட்டைச் சேர்ந்தவர். அவர் மனைவி ஆங்கிலேயர். மனைவிக்கு சூட்சும ஞானம் உண்டு. செருப்பைக் கூப்பிட்டால் வந்து காலில் மாட்டிக் கொள்ளும்.
- **Mother** தியானைச் சந்தித்து அவருடன் அல்ஜீரியா போய் சூட்சுமம் பயின்றார்.
- தியானையே கிருஷ்ணா எனக் கருதினார்.
- வாழ்வின் மந்திரம் சமஸ்கிருதத்தில் சூட்சுமத்தில் தெரிந்த-பொழுது தியான் அதைக் கேட்டார். **Mother** மறுத்து விட்டார். பின்னர் பகவானிடம் கூறினார்.

- *தியான் மரணத்தின் தலைவன் எனப் பிறகு அறிந்தார்.*
- தியானுக்குப் பகவான் ஜாடையுண்டு.
- கணவர் ரிச்சர்ட் புதுவையில் எலக்ஷனில் நிற்க வந்த-பொழுது **Mother** அவரிடம் **David** சிம்பலைக் கொடுத்து அதற்கு இந்தியாவில் யாராவது விளக்கம் கூறுவார்களா? என்று அறியும்படிக் கேட்டார்.
- **David** சிம்பல் யூதர்கட்கும், கிருஸ்த்துவர்கட்கும் சிலுவை போன்றது.
- ரிச்சர்ட் அதற்காக பகவானைச் சந்தித்தார்.
- சிம்பல் என்பது சிலை போல பக்தர்கட்குத் தெய்வமானது.
- கருநீலம் கிருஷ்ணனுடைய நிறம். அது ஆகாய நிறம். ஆகாயம் என்பது **Overmind** தெய்வீக மனத்திற்குரியது.
- ஒரு தத்துவம், மதம், யோகம் ஆகியவற்றிற்குச் சிம்பல் ஆன்மீக ஜீவனுடையது.
- *பகவான்,* **Mother, University,** *ஆரோவில் ஆகியவற்றிற்குச் சிம்பல் உண்டு.*
- பூரண யோகத்திற்குரிய சிம்பல் பகவான் சிம்பல்.
- தாலி மனைவிக்குரியது.
- மேல் நாட்டில் மோதிரம் திருமண சிம்பல்.
- எந்தச் சர்க்காருக்கும் சிம்பல் உண்டு. அசோகச் சக்கரம் நம் நாட்டின் சிம்பல்.
- காங்கிரஸ் கட்சிக்கு ராட்டினம் சிம்பல்.
- சிம்பலுக்கு சூட்சுமமான ஜீவன் உண்டு.

## ஜீவிய மணி

*வேறு வழியில்லாதபொழுது அன்னையை நாடுவதைவிட எல்லா வழிகளும் தெரியும்பொழுது அவற்றை விலக்கி அன்னையை நாடுவது சிறந்தது.*



## சத்தியம்

கர்மயோகி

பகவான் இந்த யோகத்தை மேற்கொள்பவர்க்கு நிபந்தனைகள் விதிப்பதில்லை. *தவம் கடுமையானது. உடலுக்கும், உயிருக்கும் கடுமையான நிபந்தனைகளை அது விதிக்கும்.* யோகம் மென்மையானது. ஆனால் அம்மென்மை கடுமையின் உச்சகட்டத்தைக் கடந்தது. கோபம் வந்தால் தன்னையறியாமல் எதிரியை அடிப்பவனுக்குக் கை கட்டுப்-படாது. அடிக்காதவன் திட்டுவான். திட்டாதவன் நெஞ்சு கொதிக்கும். வயிறு எரியும். அடிக்காமல், திட்டாமல், எரிச்சல்-படாமலிருப்பது கடினம். யோகத்திற்குரிய சாதகனுக்குக் கோபம் தடையெனத் தெரியும். தடையை மீறாமல் கோபப்-படாத நிலையில் எரிச்சல் கட்டுப்படாது. *எரிச்சல்படுபவன் எதற்கும் லாயக்கில்லை.* அதையும் கடந்து எதிரி தவறு என நினைக்கக்கூடாது என்றால் மனம் கட்டுப்படுமா? யோகக் கட்டுப்பாடுகள் அது போன்றவை. *எந்தக் கட்டுப்பாட்டையும் தானே ஏற்றால்தான் முழுப்பலன் வரும்.* சத்தியம் என்பது சச்சிதானந்தத்தில் சத் எனப்படுவது. உண்மை என்று நாம் வழங்குகிறோம். சத்தியம் யோகத்திற்கு அடிப்படை. பொய் சொல்பவன் அதை நிறுத்தலாம். வாயால் சொல்லும் பொய்யைக் கடந்து பொய் பல்வேறு ரூபங்களில் உலவுகிறது. பொய் சொல்ல முடியாதவர்க்கு யோகத்தை ஆரம்பிக்கும் வாய்ப்புண்டு. அம்முடிவை எடுத்தவர்க்குப் பொய் எத்தனை ரூபங்களில் வழங்குகிறது எனத் தெரிய வேண்டும்.

1. வழக்கமாகப் பொய் சொல்பவர்.
2. ஆதாயத்திற்காகச் சொல்பவர்.
3. பொய் சொல்லி ஆனந்தமடைபவர்.
4. பொய் சொல்ல பெரும் திறமை வேண்டும். அது இருந்தால் திறமை வெளிப்படும்.
5. வெட்கப்பட்டு பொய் சொல்பவர்.
6. மரியாதைக்காகச் சொல்லும் பொய்.

7. மிகைப்படுத்திச் சொல்லும் பொய்.
8. அறியாமல் பேசும் பொய்.
9. பிறர் கூறிய பொய்யை நம்பி மீண்டும் சொல்வது.
10. பயந்து சொல்லும் பொய்.
11. பகுதியான உண்மை நடைமுறையில் பொய்யாவது.
12. பொய்யை புத்தகத்தில் படித்துச் சொல்வது.
13. அசிங்கப்பட்டுச் சொல்வது.
14. ஆபாசத்தைத் தவிர்க்கச் சொல்வது.
15. குழந்தை அடம் பிடிப்பதால் சொல்லும் பொய்.
16. படிப்பறிவு இல்லாதவரிடம் சொல்லும் அவசியம் ஏற்படுத்தும் பொய்.
17. பிறர் நலனுக்காகச் சொல்வது.
18. உள்ளே உள்ள குறை — அறிவு, தெளிவு, தைரியம், பொறுமை — வெளியில் பொய்யாக வெளிப்படுவது.
19. பொய், மெய் வேறுபாடு அறியாமல் பேசும் பொய்.
20. ஏமாற்றச் சொல்லும் பொய்.

பொய் எழுந்து வாயில் வந்தால் மறுத்து
மெய் சொல்வது சரி.
**உள்ளே பொய் எழாமலிருக்கும் தூய்மை**
**யோக அடிப்படை.**

## ஜீவிய மணி

*மனம் மாறினால், மாறிய மனம் செயல்பட்டால், மாறியது உண்மையானால், பலன் வர சில நாட்களோ, சில மணி நேரமோ ஆவதில்லை. அதே நிமிஷம் இழந்ததைப் பெறுவோம். பெறும்பொழுது அது பெரியதாக இருக்கும்.*



# மனிதன் கண்ட நீதியும் தெய்வம் வழங்கும் நீதியும்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

மூலம்: ஸ்ரீ கர்மயோகி
சொற்பொழிவு ஆற்றியவர்: திருமதி வசந்தா லக்ஷ்மி நாராயணன்
சொற்பொழிவு ஆற்றிய தேதி: நவம்பர் 24, 2014

இக்கருத்து ஓரளவு விளங்கினால், அதைப் பலமுறை பல இடங்களில் பல்வேறு வகையாகக் காண்பது தெளிவு வளர உதவும். சரித்திரம், பெரியோர் வரலாறு, நாமறிந்தோர் வாழ்வு முக்கியமாக

**நம் சொந்த வாழ்வின் உள்ளுணர்வு**

இக்கருத்தை விளக்கும். இதற்கும் விலக்குண்டு. விதியின் விலக்கு விதியின் மூலத்தை ஆழ்ந்து அகன்று பரந்து விரியுமாறு விளக்குவது *மூலத்தின் விதி*. ஒரு சட்டம் தெளிவு பெற அதை ஆழ்ந்து அறிய வேண்டும். சட்டம் மூலமாக மனத்தில் ஆன்ம விளக்கமாக மலர ஒரு *சட்டம் மூலம் மற்ற சட்டங்களை, — எல்லா சட்டங்களையும் — அறிய முயல வேண்டும்*. ‘இருநீர் வியனுலகம் இனிய சொல்லாலன்றி மாறாது’ என்று புலவர் கூறியது வாழ்வின் அனுபவம் அடியோடு மறுப்பது. அடம் பிடிக்கும் குழந்தை, அழிச்சாட்டம் செய்யும் ஆண், சண்டிகேசியான பெண், ஊரை அழிக்க முயலும் நாட்டாண்மைக்காரன் எனப் பலருண்டு. அவர்களிடம் இன்சொல் பலன் தராது. *வன்சொல் அவர்களை அவர்கள் போக்கில் வலுப்படுத்தும்*. மனித நீதியும், ஊர் நீதியும் தவறும் நிலையில் உலக நீதி செயல்படும். நாம் அதை மௌன சக்தி **Silent Will** என அறிவோம்.

*சொல் மௌனமாகி, மௌனம் வலிமையானால், வலிமையான மௌனத்தின் சொல் இனிமையாக வந்தால் அழிச்சாட்டம், ஆர்ப்பாட்டம், சண்டி, அக்கிரமம், அநியாயம் அதேநிலையில் திருவுருமாறி*

**ஆண்டவன் நியாயம் மனிதனுக்கு அருளாகும்.**

வாழ்க்கை வழங்கும் பரிசுகளை எதிராகவோ, மறைமுகமாகவோ, மாற்றமாகவோ தருவது வழக்கம். பார்ட்னர் திட்டத்தைக் கொடுத்தவர் இனி தேவையில்லை என்பதால்

அவரை நீக்க முயன்றார். *அவர் அன்பர்.* பணம் முதலீடு செய்தவர் கஷ்டக் கூட்டாளியை நீக்க முயன்றார். *தன்னைத் திட்டத்திலிருந்து விலகிக் கொள்ளச் செய்யும் முயற்சி என அன்பருக்கு முதலில் அது தெரியவில்லை.* முடிவிலேயே அது விளங்கியது. முடிவில் புரிந்தது முதலிலேயே புரிந்து அன்பர் சந்தோஷப்பட்டிருந்தால், 10 ஆண்டுகள் பட்ட சிரமம், கோர்ட், கேஸ், மனத்தாங்கல், மகசூல் நஷ்டம் இருந்திருக்காது. மனிதன் எதிர்பார்ப்பது வேறு. தெய்வநீதி வேறு. தெய்வம் நியாயத்தை மட்டும் வழங்கும். *மனிதன் உள்ள மனநிலைக்கேற்ப அது வரும்.* மாமியார் மருமகளைப் பட்டினி போடுகிறாள். கொடுமைப்படுத்துகிறாள், சிறுமைப்படுத்துகிறாள். அதில் திருப்தியடைகிறாள். மருமகள் சொல்லொணாத் துன்பம் அனுபவிக்கிறாள். மருமகள் அன்பரில்லை. கொடுமை கொடுமையாகிறது. பிறகு மருமகள் அன்பராகிறாள். நிலைமை மாறுகிறது. மாமியார் மறுத்தவை அனைத்தும் மருமகளுக்குக் கிடைக்கிறது. *அவை அளவில் அபரிமிதமாகவும், தரத்தில் உயர்ந்தும், உரிமையில் உன்னதமாகவும் வருகின்றன.* கணவனுக்கு என்ன சம்பளம் எனவும் தெரியாத மனைவி, பணத்தைக் கையால் தொட்டுப் பார்த்ததில்லை. தேவைப்பட்ட பொருட்களை வாங்கும் பொருளாதார வசதியில்லை. மனைவி அடக்கமானவள். கேட்டறியாதவள். கணவனே நிலைமையை அறிந்து பொருட்களை வாங்கினாலொழிய எதற்கும் வழியில்லை. மனைவி அன்பரானாள். வசதி பெருகியது. *பெருகிய வசதி அன்பருக்கு வந்தது.* கணவனுக்கு என்ன வசதி எப்படி வருகிறது, எனவும் தெரியாது. மனைவிக்குரிய நியாயமான பங்கை கணவன் மறுக்கும் பொழுது, அன்னையின் அருள் வரும்முன் கணவன் தன்னைத்தானே விலக்கிக் கொள்வதை அறியவில்லை. மனைவிக்கும் அது தெரியவில்லை.

நியாயமும், நீதியும் ஏராளமாக உண்டு.

**அவை நம் சிற்றறிவுக்கு எட்டுவதில்லை.**

சர்வதேச ஸ்தாபனத் தலைவர், மெம்பர் ஒருவருக்கு வேலை கொடுத்தார். கொடுத்த வேலையைச் சிறப்பாக மெம்பர் செய்தார். அவருக்குத் திருப்தி. அனைவரும் பாராட்டினர்.



தலைவருக்குக் கோபம் வந்தது. 'உன்னை யார் செய்யச் சொன்னது என்றார்.' உங்கள் உத்தரவின் பேரில்தான் செய்தேன்' என பதில் வந்தது. தலைவர் வசைமாறி பொழிந்தார். *பிரச்சனையே இல்லாத பொழுது கோர்ட்டில் கேஸ் போட்டார்.* கேஸ் இருமுறை தோற்றது. இராஜினாமா செய்தார். அவர் வீண் செலவு செய்த அவ்வளவு பணமும் நன்கொடையாக வேறொருவர் கொடுத்தார். அவதூறுக்கு ஆளான மெம்பரை அனைவரும் பாராட்டினர். CEO-வாக நியமித்தனர். ஸ்தாபனம் 3 ஆண்டில் பிரபலமாயிற்று. தண்டனை அனுபவித்த மெம்பருக்கு முடிவில் புரிந்தது. ''தலைவர் தன்னை முழுவதும் விலக்கிக் கொள்ளும்படி இதுவரை நடந்திருக்கிறார்'' என்று விளங்கியது. தலைவர் ஆண்டவன் நியாயத்தை அவர் பாணியில் நிறைவேற்றியுள்ளார். *எவரை நாம் உடனடியாக விலக்க வேண்டுமோ அவரை விலக்காவிட்டால், அவரே முன்வந்து விலக முடிவு செய்த பொழுது நம்மை விலக்க முயல்வார்* என்பது வாழ்வு செயல்படும் வகை. அதிர்ஷ்டம் பலருக்குத் தேவையில்லை. சிலருக்குக் கசப்பு, வேப்பங்காய். அடுத்தவரோ, தகப்பனாரோ, நண்பரோ அதிர்ஷ்டத்தை அழைத்து வந்தால் அவர்மீது கோபப்பட்டு அவரை விட்டகல்வது, *தரித்திரம் அதிர்ஷ்டத்தை விலக்குவது.* கொடுப்பது அன்பராகவோ, அன்னையாகவோ இருக்கலாம். அன்பருக்கு வாழ்வு அன்னையை அருகில் அழைத்து வாழ்வின் இருளை விலக்கும் செயல் அது என்று ஆரம்பத்தில் புரியாது. முடிவில் பலருக்குப் புரியும். முடிவிலும் புரியாதவருண்டு.

உலகில் விரயமில்லை. வலி, துன்பம், நோய், மரணம் மனிதனுடைய குறுகிய பார்வைக்குரியன என்றால் அதே கோணத்தில் நாம் வாழ்வின் நிகழ்ச்சிகளைக் காண்பது அறிவுடைமை. *கணவன் பெரிய வருமானமுள்ள வியாபாரத்தை திவாலாக்கியபின் இதர சொத்துக்களையும் அழித்தார்.* என் குடும்பம் ஆத்மாவில் மலர அவை தேவையென என்னால் இன்றும் ஏற்க முடியவில்லை. அன்று எப்படி அது விளங்க முடியும்? *அவர் செய்தவற்றை குதூகலமாக நான் வரவேற்றிருக்க வேண்டும் என்பது ஆண்டவன் நியாயம்.* நன்றி கெட்ட செயலை நாள்தோறும் நண்பன் தவறாமல் செய்த பொழுது மனம் மகிழ

வேண்டும் என்பது சட்டமானால், இன்றும் அந்தச் சட்டம் எனக்குத் தேவையில்லை என்றே மனம் அலறுகிறது. பெரும்பலன் — அவர் வாழ்வில் அறியாதது, அவர் உலகில் ஒரு முறையும் எழாத பலன் — பெற்றவர் ''உன்னால்தான் எனக்குக் கஷ்டம்'' என நேரடியாகக் கூறுவது வாழ்வு. நல்லது வந்தவுடன் கொடுத்தவருக்குத் தாமதமின்றி கெடுதல் செய்யத் துடிப்பவரைக் கண்டு மனம் குதூகலம் பெற வேண்டும் என்பது ஆண்டவன் நியாயமானாலும், அந்தப் பொறுமை எனக்கின்றில்லை என்பதுடன், *இனியும் அது வேண்டாம் என்றே என் மனம் அடித்துக் கூறுகிறது*. 1947-இல் ஒரு கோடி பேர் இடம் பெயர்ந்து, அல்லலுற்று, அவதிப்பட்டு நாடு அவமானம் அடைந்திராவிட்டால், வந்த சுதந்திரம் வந்த வழியே போயிருக்கும் என யாரிடம் கூற முடியும்? *இறைவன் பெற்ற சுதந்திரத்தைக் காப்பாற்றிய முறையென இன்று ஏற்க முடியுமா?* லஞ்சம், ஊழல், **B.A, M.A** பட்டம் பெற்று தமிழோ, ஆங்கிலமோ எழுத முடியாத படிப்பு, இளைஞர்கள் அமெரிக்கப் பாதையில் செல்லும் அலங்கோலம் இவையெல்லாம் நாடு முன்னேறும் பாதை என எப்படி ஏற்பது? வயிற்றைக் கீறி கட்டியை எடுக்கும் டாக்டருக்கு பீஸும், நன்றியும் கூறலாம். நம் கண் எதிரே 5 வயது மகனைப் பட்டினி போடும் நாத்தனாருக்கு நன்றி கூற முடியுமா? தன் வாழ்வின் அவல ருசிகளை அனுபவிக்கும் தகப்பனார் பெண்கள் திருமணத்தைக் கருதாமல், 'அவர்கள் கதி என்னாவது?' என யாராவது கேட்டால், 'தலைவிதி' என்றால் எப்படி மனம் பொறுக்கும்? அமெரிக்காவில் **Ph.D.** பட்டம் பெற்று வேலையிலிருக்கும் பெரும் செல்வந்தர் மகனுக்குப் பெண் தர மறுக்கும் தகப்பனார் கூறுவது ''என் பெண்ணை வெளி நாட்டிற்கு அனுப்ப முடியாது.'' அவர் தன் மகன் வெளிநாடு போவதற்குச் சம்மதப்பட்டார்.

இந்த நியாயம் யாருக்கு வேண்டும் என்பதே
எல்லோரும் எழுப்பும் குரல்.

யாருக்கு வேண்டுமோ, வேண்டாமோ, *அதுதான் நடக்கும்*. தவிர்க்க முடியாது எனத் தெரிந்தாலும் ஏற்க முடியாது என்பதே மனநிலை.



ஆள்வது ஆனந்தம். *ஆளப்படுவது பேரானந்தம்*

என்பதை அறிந்தவர் அதன்படி செயல்பட்டால் பேரானந்தம் பெரும்பேறாகும். இவற்றை ஆதிநாள்தொட்டு உலகமறியும். *உலகம் அறிந்ததை உள்ளம் அறியும் நேரம் உயர்ந்த நேரம்*. 1946-இல் தமிழ் நாட்டுக் காங்கிரஸில் 4 அணா உறுப்பினராக இராஜாஜியைச் சேர்க்க மறுத்தது, 1952-இல் அவருக்கு முதன் மந்திரி பதவிக்கு அழைப்பு என அழைத்தவரோ, அழைக்கப்பட்டவரோ அறிய முடியாது. பெரும் அறிஞர் மூதறிஞரானாலும், எட்டாத ஞானம் அது. *நாளை அது சிறுவனும் அறிந்து ஏற்கும் மனப்பான்மையாகும்*. அம்மனப்பான்மை நாம் அதிர்ஷ்டம் என அறிவதை, அன்று வரம் பிரவாகமாகப் புரளும் பேரதிர்ஷ்டத்தின்முன் தரித்திரமாகத் தோற்றுவிக்கும். க்ஷணம் கூட இம்மனநிலையை மனமோ, அறிவோ இன்று ஏற்கும் நிலை நமக்கில்லை. அதிர்ஷ்டம் க்ஷணம் வரும். மணிக்கொருமுறை அந்த க்ஷணம் மாறிமாறி வரும். அதிர்ஷ்டம் என்பதை செல்வம் என அறிவோம். *செல்வாக்கு செல்வத்தைக் கடந்தது*. செல்வாக்கைக் கடந்ததுண்டா? வாக்கு உள்ளே போய் செல்வாக்கு 'உள்வாக்கா'னால், அது உலகில் நாம் பெறும் செல்வாக்காகும்.

ஹிட்லர் போர் தொடுத்த பொழுது அமெரிக்க உதவியை ஐரோப்பியர் நாடினர். *''இது ஐரோப்பியருடைய உள்நாட்டுப் பிரச்சனை. ஏன் அமெரிக்கா அங்கு வர வேண்டும்''* என்று அமெரிக்கர் மறுத்தனர். ஜனாதிபதி ரூஸ்வெல்ட் மட்டும் உதவ ஆசைப்பட்டு பல வகைகளில் போரில் பங்கு கொண்டார். முடிவான ஒரு ஜெர்மன் போர்க் கப்பல் அமெரிக்க வியாபார கப்பலைத் தாக்கியதை ஒரு சாக்காகக் கொண்டு போரில் இறங்கினார். நாட்டு மக்களுக்கு அபிப்பிராயமில்லை. 1943-வரை ஐரோப்பாவில் நடக்கும் யுத்தங்களில் அமெரிக்கர் கலந்து கொள்வதை அந்நாட்டு மக்கள் வெறுத்தனர். அப்பொழுது **USA** இராணுவம் 16000 பேர்கள் கொண்டது. மிகச் சிறிய இராணுவம். இராணுவத்தில் சேனாதிபதிக்கு மட்டும் காரிருந்தது. சொந்த வியாபாரம், ஏற்றுமதி, உற்பத்தி, செல்வம், கல்வி, பல்கலைக்கழகம், ஆராய்ச்சி போன்றதே அமெரிக்கர்

விரும்பியது. *போர் அவர்கள் விரும்பியதில்லை. அதுவும் அவர்களுடன் சம்பந்தப்படாத போரில் அவர்கட்கு அக்கறையில்லை.* இன்று கடந்த 60 ஆண்டாக அமெரிக்கா உலக வல்லரசாக, இராணுவ அதிகாரியாக, பொருளாதாரத் தலைமை பெற்று உலகை (commerical domination, cultural domination) வியாபாரத்திலும், கலாச்சாரத்திலும் ஆள்வது அன்று அமெரிக்கர் ஏற்காத ஒன்று.

ஒரு பிலிம் புரொடியூசர் கருணாநிதியுடன் சண்டை போட்டுக் கொண்டார். ஓராண்டிற்குப்பின் கருணாநிதி மந்திரியாகி விட்டார். ''இவர் மந்திரியாவார் எனத் தெரிந்திருந்தால் நான் சண்டை போட்டிருக்க மாட்டேன்'' என்றார். வாழ்க்கை பின்னால் வருவதை மாற்றியும், தலைகீழேயும் காட்டும். நம் பள்ளியில் (Primrose) முதல் 5 வகுப்புக்கு, இடத்திற்குப் போட்டி. 5 முதல் 11 வகுப்பில் மாணவர் குறைவு. State Board, CBSE, ICSE என்று பல பாட திட்டங்களிருப்பதால் பெற்றோர் பிள்ளைகளை மெடிக்கல், என்ஜினீயரிங் சேர்க்க மார்க் வேண்டும். Primrose-இல் படிப்பு முக்கியம், மார்க்கில்லை. அதனால் சில மாணவர்களை, கடந்த 2 அல்லது 3 ஆண்டுகளாக வேறு பள்ளிகட்கு மாற்றினர். பிள்ளைகள் மனப்பாடம் செய்து மார்க் வாங்கினாலும் மெடிக்கல் சீட் கிடைக்காது. *மனப்பாடம் செய்து மார்க் வாங்கி Anna University-இல் இடம் கிடைத்து படிக்க முடியாமல் மாணவர்கள் திணறுகிறார்கள்.* முடியாமல் வந்துவிடுகிறார்கள். இந்த ஆண்டு நம் பள்ளி மாணவன் மனப்பாடம் செய்யாமல் State-இல் முதலிடம் பெற்றவுடன் மேல் வகுப்புகளில் சேர போட்டி எழுகிறது.

கண்ணுக்குத் தெரிவது உண்மை, பெரியது என்பது மனித நிலை. அதுவே நீதி, நியாயமாகும்.

**நீதியும், நியாயமும் நமக்குத் தெரிந்த வழியாக மட்டும் வருவதில்லை. தெரியாத வழியாக அதிகமாக வரும்.**

மேலும் சிறியது தவறினால், பெரியது வரும் என்பது ஒரு சட்டம். உலகம் பெரியது, மிகப் பெரியது என அறிவதும் பெரிய ஆத்மாவுக்குப் பெரியதாகத் தெரியாது. அரசியலில்



அதுபோன்ற நோக்கமுடைய தலைவர் உயர்ந்து, எழுந்ததைக் கண்டு உலகம் 1966-இல் வியந்தது.

இருப்பதை விட்டுப் பறப்பதை நாடாதே என்பது மரபின் விவேகம்.

**இருப்பதை விட்டாலன்றி பறப்பது கிடைக்காது என்பது ஸ்ரீ அரவிந்தம்.**

'விடலறிய எம் போல்வார் இதயம் தொழும்' ஆண்டவனே முன்வந்து உள்ளதை எடுத்தால் மனிதன் அநீதியைக் காண்கிறான். தேவனுடைய 'வேதாந்தம்' என்ற கதையில் வேதாந்தம் B.A படித்து முடிக்காமல் 1943-இல் 200/-ரூபாயுடன் சென்னை வந்து அப்பணத்தை இழந்து பெற்று ஒரு சிறிய மனப்பான்மையுள்ள பணக்காரர் வீட்டில் ரூ.30/- சம்பளத்திற்கு வேலை செய்யும் பொழுது 2 போக்கிரிகள் அளவு கடந்த சாமர்த்தியத்துடன் அந்த 200-இல் 180-ஐப் பிடுங்கிக் கொள்கிறார்கள். பணக்காரக் குடும்பம் மட்டமான குடும்பம். அதைவிட்டு வெளியே வராமல் வேதாந்தம் முன்னுக்கு வர முடியாது. ரூ.30/- சம்பாதிப்பவனுக்கு ரூ.25,000/- முதல் கொடுத்து பத்திரிக்கை ஆரம்பிக்கச் சொன்னவர் தம் டாக்டர் பெண்ணையும் கொடுக்க முன்வருகிறார். அவனுக்குப் பத்திரிக்கையில் விருது கிடைக்க இருக்கிறது. பத்திரிக்கை வேலை கொடுக்கவும் நினைக்கிறது. மத்திய மந்திரி தமிழ்நாடு சுற்றுப்பயணத்தில் அவனை உடன் அழைத்துப் போகிறார். பணக்காரக் குடும்பம் *அநியாயமாக அவன்மீது திருட்டுப்பட்டம் கட்டியதால் அதைவிட்டு வெளியேறுகிறான். வந்த அத்தனை அதிர்ஷ்டங்களும் ''தரித்திரத்தை'' — பணக்கார குடும்ப வேலையை* — விட்ட பிறகே வருகிறது. அவனே விடமறுக்கும் தரித்திரம் தானே முன்வந்து விலகியது ஆண்டவன் நீதி. அன்று அவனுக்கு அநீதியாகத் தோன்றியது.

நாட்டுக்கு நாடு பண்பு கலாச்சாரம் மாறுகிறது. நம்மூரில் கோவிலுள் செருப்புப் போட்டுக் கொண்டு போக எவரும் நினைக்க முடியாது. செருப்பில்லாமல் வருவது இங்கிலாந்தில் அநாகரிகம். ஒரு வீட்டினுள் ஆண்கள் நுழைந்தால், உட்கார்ந்துள்ள பெண்கள் எழுந்து நிற்பது மரியாதை.

இங்கிலாந்தில் உள்ளே வரும் பெண்ணை மரியாதையாக வரவேற்க ஆண்கள் எழுந்து நிற்பார்கள். எச்சில், தீட்டு என்பதை அறியாத நாகரிகம் உண்டு. நமக்கு அவை முக்கியம். முதலாளியை வேலைக்காரர் அமெரிக்காவில் பேரிட்டு அழைப்பார்கள். *நாகரிகம், நாட்டு வழக்கம், பண்பு, மாறுவதால்* ஒரு *நாட்டுப் பழக்கம் அடுத்த நாட்டில் வேறு உணர்ச்சிகளை எழுப்பும்*. பண்பு மாறினால், ''நியாயம்'' 'அநியாயமாக'த் தோன்றும். அதில் விஷயமில்லை. நியாயம், நீதி, பழக்கம், வழக்கம் ஆகியவற்றைப் பாகுபாடு செய்தறிவது அவசியம்.

தோட்டத்தில் ஒரு கட்டடம் எழுப்பும்முன் அங்கொரு மரமிருந்தால் வெட்டி அப்புறப்படுத்துகிறோம். நம் மரபில் பச்சை மரமானால், அதுவும் சீசனில் பூத்துக் குலுங்கும் பொழுது வெட்டமாட்டார்கள். தென்னை மரத்தை எவரும் வெட்டத் தயங்குவார்கள். வெட்டுவது அவசியமானால், ஒரு தென்னம்பிள்ளையை வேறொரு இடத்தில் நட்டபின், மரத்தை வெட்டுவார்கள். அமெரிக்காவில் அப்படி ஒரு எண்ணம் தோன்றாது. பழக்கம் என்பதும் அதற்குரிய உண்மையும் வேறு. ஆரோவில் ஆலமரம் கோடரியைக் குத்தி வைத்ததால் வேதனைப்பட்டு, அன்னையிடம் முறையிட்டது. சாப்பாட்டு அறை மாமரம், பட்டுப்போனதால் வெட்ட முடிவு செய்த செய்தியை, மரம் அன்னையிடம் கூறிப் புது வாழ்வு பெற்றது. *மரத்திற்கு உயிர் உண்டு. அதை அறியாமல் ஏராளமான மரங்களை வெட்டி அப்புறப்படுத்தினால் அந்த நிலம் கொடுக்கக் கூடிய பெரும் வருமானம் இல்லாமல் போகும் என்பதும் உண்மை.* ஆனால் அறிவில்லாமல் செய்யும் காரியம் அறியாமைக்குரிய பலனைப் — தண்டனை — பெறும் என்பது உண்மை. மரம் அவசியம் வெட்ட வேண்டிய சந்தர்ப்பம் எழுந்தால் என்ன செய்வது? *நல்லது, கெட்டது, பாவம், புண்ணியம் என்பது மனத்திற்குரியது. மனிதனுக்குரியதல்ல.* தாழ்ந்தவன் தவறு செய்தால் தண்டனை பெறமாட்டான். அதே தவற்றை உயர்ந்தவன் செய்தால் தண்டனை வரும் என்பது உலகறிந்த உண்மை. ஜட்ஜ் கொலையாளியைத் தூக்கில் போடுவதால் சட்டப்படி குற்றமாகாது. அது அவருக்குப் பாவமுமில்லை. *புண்ணியமாகவும் இருக்கும்.* நாம் வாங்கிய மனையில் பல



மரங்கள் இருப்பதால் அவற்றை வெட்டி அகற்றி வீடு கட்ட வேண்டும் என்றால் அன்பர் செய்யக் கூடியதென்ன? மனை வாங்கும்முன் யோசிக்க வேண்டிய விஷயம் இது. *சமர்ப்பணம் என்பதை அன்பர் பின்பற்றுபவரானால், சமர்ப்பணம் அவருக்குத் தவறாது வழி காட்டும்.* மரம் வெட்டுவது அவர் வாழ்வையோ, ஆத்மாவையோ பாதிக்காது என்றால் சமர்ப்பணம் வழிவிடும். சமர்ப்பணம் தடையானால் அவர் அம்மனையை வாங்கக் கூடாது. தர்மசங்கடமான நிலை வாழ்வில் அரிபொருளாக வரும். சமர்ப்பணத்தை ஏற்ற அன்பருக்குத் தர்மம் சங்கடமாகாது. *தர்மம் சங்கடமானால் சமர்ப்பணம் மேலெழுந்தவாரியாக உள்ளது எனப் பொருள்.*

சமர்ப்பணம் தர்ம சங்கடமான நிலையை அழகாக அகற்றுவதைக் காண்பது அற்புதம். சமர்ப்பணம் ஆழ்ந்து ஆத்ம ஜீவனோடிருந்தால், தர்ம சங்கடம் *தலைகீழே மாறி தலை காக்கும் தர்மமாகும்.* பார்ட்னர் தவறு செய்து தண்டனை பெறுவது நியாயமானாலும் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. செய்வது கொட்டம் அடித்தல், பாவம் என்பது தர்ம சங்கடமான சூழ்நிலை, ஏற்கவும் முடியாது மறுக்கவும் முடியாது என்ற சந்தர்ப்பம் உண்டு. சில பரீட்சைகள் 3 முறை மட்டும் எழுத அனுமதியுண்டு என்றால், மூன்றாம் முறை எழுதுபவன் எடுக்கக் கூடிய எச்சரிக்கையை எடுக்காமல் எதிரானதைச் செய்தால், அவன் செயலின் பொறுப்பு அன்பருடையது எனில் அது சங்கடமான நிலை. ஒரு சந்தர்ப்பத்தில் எந்த வழியாகவும் போக முடியாது எனில் இரண்டு எதிரெதிரான வழிகட்கும் உயர்ந்த வழியொன்றுண்டு. அதை மனம் அறியாது. சமர்ப்பணம் அறியும். அதைச் சத்திய ஜீவியம் செய்யும்.

***எவ்வழியும் தவறான நேரம், நேர்வழி எழுவது***
***அன்னைக்குச் செய்யும் சமர்ப்பணம்.***

(முற்றும்)

## ஜீவிய மணி

*நடப்பதற்கு முன்னால் புரிவது நம்பிக்கை.*

## அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

நம் எல்லோருக்கும் நம்பிக்கை இருக்கிறது. அதற்கெல்லாம் அளவுண்டு. ஒரு பிரச்சனை ஏற்பட்டால் பிரார்த்தனையால் தீரும். தவறினால் சமர்ப்பணத்தால் தீரும். எந்த முறையும் பலிக்காத நிலையிலும் நம்பிக்கையை இழக்காவிட்டால், நம்பிக்கையால் தீரும். நமக்குள்ள நம்பிக்கை அளவுடையதாக இருக்கலாம். பிரச்சனை அதைவிடப் பெரியதாக இருக்கலாம். நம்பிக்கையைச் சற்று வளர்த்துக்கொண்டால், பிரச்சனைக்கு அது சமமாகும்பொழுது பிரச்சனை தீரும். இந்த முறையின் பல பகுதிகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

*பகுத்தறிவும் நம்பிக்கையும்:*

பொதுவாக மனிதன் வாழ்க்கையைத் தன் பெற்றோர்கள் அமைத்துக் கொடுத்தபடி ஏற்றுக்கொள்கிறான். குடும்பத்தின் பழக்கங்களையே முக்கியமாகக் கருதி ஏற்றுக்கொள்கிறான். அடுத்தாற்போல், படிப்பால் ஏற்பட்ட மாறுதல்களையும் கைக் கொள்கிறான். அதற்கடுத்தாற்போல், தனக்கு என்று ஒரு பாதையை 25 முதல் 35 வயதிற்கு அமைத்து, அதன்படி நடக்கிறான்.

ஒரு முக்கியமான வேலையைச் செய்யும்பொழுது தன் குடும்பப் பழக்கத்தையே ஒருவன் மேற்கொள்கிறான். வீடு கட்ட வேண்டும் என்றால் பிறரிடம் உதவி வாங்கிப் பழக்கம் இல்லாத குடும்பத்தில் பிறந்தவன், தானே முன்நின்று கட்ட முடியும் என்ற சூழ்நிலையை ஏற்படுத்தி, வீடு கட்ட ஆரம்பிக்கிறான். அதனால் பெரும்பாலும் காரியம் கூடிவிடும். தடை ஏற்பட்டால் படிப்பால் தனக்கு ஏற்பட்ட அறிவைப் பயன்படுத்துகிறான். மேலும் சிரமம் வந்தால், தனக்கென்று ஏற்பட்ட பாணியை **(individuality)** ஒட்டிச் சமாளிக்க முயல்கிறான். இவையெல்லாம் பலிக்கும்பொழுது சில



நம்பிக்கைகள் வளர்கின்றன. சட்டம் நமக்குச் சாதகமாக இருக்கிறது. அதனால் பலிக்கும் என்று ஒரு நம்பிக்கை. ஊரில் எவரும் அநியாயமாகப் பேசமாட்டார்கள். நம் பக்கம் நியாயம் இருக்கிறது, அதனால் பலிக்கும் என்றொரு நம்பிக்கை. என் திறமை எப்பொழுதுமே தோற்றதில்லை. இந்த விஷயத்தில் எனக்குத் திறமையிருக்கிறது, அதனால் பலிக்கும் என்று நம்புகிறோம். இதெல்லாம் பகுத்தறிவுக்கு உட்பட்டது. சட்டம், ரூல், நியாயம், திறமை, நிலைமை, வழக்கம், பழக்கம் போன்றவைகளில் நமக்கு நம்பிக்கையுண்டு. அந்த நம்பிக்கை பலன் அளிப்பது வழக்கம்.

டாக்டர் மீதுள்ள நம்பிக்கை அந்த வகையைச் சேர்ந்தது. இந்த நம்பிக்கைகளில் எல்லாம் பலிக்காத பிரச்சனை ஒன்று ஏற்பட்ட பொழுதுதான், இவற்றையெல்லாம் தாண்டி தெய்வத்தை நம்புகிறோம். பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட தெய்வ நம்பிக்கை ஒன்றுண்டு. அது பகுத்தறிவுக்குப் புறம்பானதன்று; பகுத்தறிவுக்கு மேற்பட்டது. பகுத்தறிவில்லா-தவன் அப்படிப்பட்ட நம்பிக்கையைக் கைக்கொண்டால் அது மூடநம்பிக்கையாகும். பகுத்தறிவுடைய ஒருவன், அதற்கு மேலுள்ள நம்பிக்கையைக் கைக்கொண்டால் அதையே இங்கு **faith** தெய்வ நம்பிக்கை, நம்பிக்கை என்று குறிப்பிடுகிறோம். இதனால் தெய்வம் நம் வாழ்வில் செயல்பட்டு ஒரு பிரச்சனை தீர வேண்டுமானால் சட்டம், திறமை, புத்தி, பழக்கங்கள் ஆகியவற்றில் உள்ள நம்பிக்கையை நாம் தாண்டி வர வேண்டும். அப்படி அவற்றைக் கடந்து வந்தால்தான் நம்பிக்கையின் முழுப் பலன் கிடைக்கும்.

உடல் நோய் வந்தபொழுது அன்னைமீது நம்பிக்கைக் கொண்டு பிரார்த்தனை செய்தால், நோய் பல சமயம் தீர்வது வழக்கம். சில சமயங்களில் குறைவது போலவும், அதிகமாவது போலவும் மாறி மாறி இருக்கும். நமக்கு அன்னைமீது நம்பிக்கை இருக்கிறது. அதே அளவுக்கு நம் உடலுக்கு நம்பிக்கையில்லை. உடல், யுகாந்த காலமாக மருந்து சாப்பிட்டுப் பழகியது. அதற்கு மருந்துமீது நம்பிக்கை

இருக்கிறது. எனவே, அன்னை மீது நம்பிக்கையிருந்தாலும், மருந்து சாப்பிட்டால்தான் உடல் குணமாகும் என்று அறிந்து மருந்து சாப்பிட ஆரம்பித்தால், 10 வேளை மருந்து இரண்டாம் வேளையில் குணம் கொடுக்கிறது. உடலுக்கு மருந்தின்மீது நம்பிக்கையிருப்பதால் அன்னை மருந்து மூலமாக சீக்கிரம் நோயைக் குணப்படுத்துகிறார்.

ஆனால் டாக்டர் கைவிட்டபின் நமக்கும், நம் உடலுக்கும் மருந்து, பழக்கம், டாக்டர், எல்லாவற்றின் மீதும் உள்ள நம்பிக்கை போனபின், அன்னைமீது நம்பிக்கை வந்து பிரார்த்தனை செய்தால், டாக்டர் வியக்கும்படி நோய் மின்னல் வேகத்தில் குணம் அடைகிறது. ‘என் தகப்பனாரை எல்லா டாக்டர்களும் கைவிட்டனர். அவர் குணமான பின்னும் எந்த டாக்டரும் நம்பவில்லை. இந்த அளவு முற்றியபின் கான்சர் எப்படிக் குணம் ஆயிற்று என்று தகப்பனாராலும், என்னாலும், டாக்டராலும் நம்ப முடியவில்லை’’ என்று ஒரு பெண் அடிக்கடி சொல்வதுண்டு.

உடலுக்கு மருந்தின்மீது நம்பிக்கையிருந்தால் அன்னை மருந்து மூலமாகக் குணப்படுத்துகிறார். எல்லா நம்பிக்கை-களையும் இழந்தபின் அபரிமிதமாக, ஆச்சரியப்படும் வகையில், மின்னல் வேகத்தில் அன்னை பிரச்சனையைத் தீர்க்கின்றார். அன்னையின் தெய்வீகச் சக்தி அதிகமாக நம்மில் செயல்பட வேண்டுமானால், வழக்கமாக உள்ள நம்பிக்கைகளை நாம் விட்டுவிட்டு, அன்னைமீது நம்பிக்கையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். டாக்டர் கைவிட்டபின் நம்பிக்கையை இழப்பவர் பலர். அதன்பின் அன்னைமீது நம்பிக்கை ஏற்படுவது சிலருக்குண்டு. அதற்குப் பலன் உண்டு; பெரும்பலனும் உண்டு. டாக்டர் முழு நம்பிக்கையோடு வைத்தியம் செய்யும்-பொழுதும் நம்முடைய முழு நம்பிக்கையையும் அன்னைமீது வைத்து, டாக்டரையும், மருந்தையும் கருவியாகக் கருதுவது உயர்ந்த நம்பிக்கை.

நம்பிக்கை முழுப் பலன் அளிக்க நமக்கு மற்ற விஷயங்-களிலுள்ள நம்பிக்கை அற்றுப்போக வேண்டியது அவசியம்



என்பதைப்போல், நம்பிக்கை பலன் அளிக்க வேறு சில நிபந்தனைகளும் உண்டு.

ஒரு வேலையில் நாம் செய்யக்கூடியது, செய்ய வேண்டியது என்று பல உள்ளன. அவற்றையெல்லாம் முடித்த பின்னரே நம்பிக்கையுடன் செய்யும் பிரார்த்தனை பலிக்கும். எனக்கு அன்னைமீது நம்பிக்கையிருக்கிறது. ஆனால் கல்லூரிக்குப் போகமாட்டேன். எனக்குப் பாஸ் தானே வரும் என்பது நம்பிக்கையில்லை; பகுத்தறிவும் இல்லை; பொருத்தமில்லாத செயல். மாணவன் தன் கடமைகளைச் சரிவரச் செய்தபின் செய்யும் பிரார்த்தனைக்குத் தேவையான நம்பிக்கையையே இங்கு நாம் ஆராய்கிறோம். மேற்சொன்னபடி பேசுபவன் மாணவன் இல்லை; மாணவனுக்குரிய தகுதியைப் பெற்றவனில்லை; அவனுக்கு வெற்றிக்கோ, தோல்விக்கோ உரிமை இல்லை.

தம் 15 ஏக்கர் நிலத்தை எட்டிப்பார்க்காதவர், தானே பெரும் விளைச்சல் வரும் என்று சொல்வதும், ரூ.650/- சம்பளம் உள்ளவர் தாம் தம் நம்பிக்கையால் அதிர்ஷ்டத்தைப் பெறப்போகிறேன் என்று பறைசாற்றி முப்பதாயிரம், மூன்று வட்டிக்குக் கடன் வாங்கி ஊதாரிச் செலவு செய்பவரும், **B.Sc III Class** பாஸ் செய்துவிட்டு **I.A.S** ஆபீஸராகப் போவதாகத் திட்டமிடுபவரும், 40 மாணவருள்ள பள்ளியில் ஒவ்வொரு வருஷமும் 28-ஆம் **rank** வாங்கியவர் **B.A** இரண்டாம் முறை பாஸ் செய்து **I.A.S** நிச்சயமாகக் கிடைக்கும் என்று உறுதியாக நம்புபவரும், சாப்பாட்டிற்கு எந்த வருமானமுமில்லாத குடும்பத்தில் 8 வயதுப் பையனை ராஜீவ் படித்த **Dehradoon Military College**-இல் சேர்க்க பிரம்மப் பிரயத்தனப்படுபவரும் நம்பிக்கையுடையவரில் சேர்ந்தவரில்லை. அவர்களிடம் காணப்படுவது ஆசை; சொல்லப்போனால் பேராசை; அதிலும் அறிவுக்குப் பொருத்தம் இல்லாத, அர்த்தமற்ற பேராசை. அவர்களை நான் இக்கட்டுரையில் விமர்சிக்க விரும்பவில்லை. அவர்களுடைய நிலை வேறு. நம்பிக்கை உடையவர்கள் நிலை வேறு.

நம்பிக்கையுடன் ஒரு பிரார்த்தனையை மேற்கொள்ளும்முன், அந்தக் காரியத்தில் நம்மால் செய்யக்கூடிய எல்லாவற்றையும் நம் திறன் முழுவதையும் செலுத்தி நம் திறமையைப் பூர்த்தி செய்துவிட வேண்டும். காரியத்திற்குத் தேவையானவற்றில் கால் பங்கே நம் திறமையால் பூர்த்தியடையுமானாலும், அந்தக் கால் பங்கைப் பூரணமாக நாம் செய்து முடிக்க வேண்டும். அதாவது நம்மால் முடிந்தவை அனைத்தையும் சொச்சமில்லாமல் செய்துவிட வேண்டும். அதன் பிறகே பிரார்த்தனை எழுகிறது. பிரார்த்தனைக்குரியதே நம்பிக்கை. தம்மால் செய்ய முடிந்ததைப் பாக்கியாக வைத்தவர்களை நம் பட்டியலில் சேர்க்கவில்லை. **Mother begins where man ends.** நம் திறமை முடியுமிடத்தில் அன்னை ஆரம்பிக்கின்றார்கள்.

உடலில் திட்டுத்திட்டாய் வெள்ளையாக இருக்கிறது. 10 வருஷமாக எத்தனையோ வைத்தியம் செய்துவிட்டேன்; பலன் இல்லை. நூற்றுக்கு நூறு நியாயமான வழக்கு. கீழ்க்கோர்ட்டிலும், அப்பீலிலும் தோற்றுவிட்டது. சொத்து பறிபோய்விடும். இரண்டு நாளில் போய் விடும். அறிவுக்கு எட்டிய வழியோ, கண்ணுக்குத் தெரிந்த பாதையோ இல்லை. டிபார்ட்மெண்டில் பரீட்சை எழுத 2 சான்ஸ் உண்டு. 2 **exemptions** உண்டு. 4-உம் தாண்டியாகிவிட்டது. பரீட்சை பாஸாகவில்லை. இன்னும் ஒரு மாதத்தில் வயது 40 பூர்த்தியாகிறது. அதற்குப்பின் பிரமோஷன் இல்லை. இதுபோல் கைவிடப்பட்ட மனைவி, பறிபோன சொத்து, தீராத வியாதி, 12 வருஷமாக வசூலாகாத கடன், ஆகிய பல நூறு பிரச்சனைகளைச் சொல்லலாம்; அன்னைக்கும் பிரார்த்தனை செய்துபார்த்தேன். மற்றதெல்லாம் பலிக்கிறது. இந்த விஷயம் மட்டும் பலிப்பதில்லை என்ற நிலையில் உள்ள பிரச்சனை ஒன்றை நம்பிக்கையை அதிகப்படுத்திக்கொண்டு, அதன் மூலமாகத் தீர்ப்பதெப்படி என்று கருதுவோம்.

இப்படிப்பட்டவர்கள் நிதானமாகப் பிரச்சனை விஷயத்தில் ஈடுபட ஆரம்பித்தால், 'இது குணம் ஆகாது என்று எனக்குத் தெரியும்; ஆசை கெட்டகேடு; ஏதாவது மருந்து போட்டுக்



கொள்கிறேன்'' என்பது போன்ற ஒரு பதில் மனதில் இருப்பதைக் காண்பார்கள். அதாவது, பிரச்சனை தீராது என்று திடநம்பிக்கை மனத்தின் ஆழத்திலிருக்கிறது. ஆசைக்காகப் பல செய்வது-போல், அன்னைக்கும் பிரார்த்தனை செய்கிறார்கள். அவர்கள் மனத்தில் தீராது என்றுள்ள நம்பிக்கையே பலிக்கிறது. அது ஆச்சரியமில்லை.

மனம் அப்படியிருந்தால், முதலில் மனத்துடன் விவாதம் நடத்தி, 'நான் அன்னையின் பக்தன். எனக்கு இந்தப் பிரச்சனை நிச்சயமாகத் தீரும். அன்னைக்குப் பிரார்த்தனை செய்தபின் பிரச்சனை தீரவில்லை என்றால் அன்னைக்குச் சக்தியில்லை என்று அர்த்தமில்லை. ஏதோ தடை என்னிடமிருக்கிறது. என்னிடமுள்ள தடையை ஆராய்ந்து, கண்டுபிடித்து, விலக்கி, பிறகு பிரார்த்திக்கிறேன்'' என்று நம்பிக்கை இன்மையை விலக்கி, மனத்தில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். அதுவே முதல் கடமை.

அதன்பின் இந்த வியாதிக்கு மருந்து எங்கெல்லாம் கிடைக்கும் என்று முழுவதும் ஆராய்ந்துவிட்டோமா, குறையிருக்கிறதா எனப் பரிசீலனை செய்ய வேண்டும். இந்தக் கடன் விஷயத்தில் நாம் காலத்தில், முறையாக வசூலிக்க முழு முயற்சி செய்திருக்கிறோமா என்று யோசிக்க வேண்டும். வழக்கு நடத்தும்போது நாம் செய்யக் கூடியது ஏதாவது பாக்கியாகிவிட்டதா என்று கண்டறிய வேண்டும். கணவன் கைவிட்டுப்போனதில் தன் பங்கு சிறிதளவேனும் உண்டா என்று கேள்வி எழுப்ப வேண்டும். 4 முறைகள் பரீட்சை எழுதினோம், முறையாகப் படித்தோமா என்று நம்மை நாமே கேட்க வேண்டும். இப்படி எல்லாம் கேள்விகள் எழுப்பியவுடன் ஒரு மருந்தைப் பற்றிக் கேள்விப்படுவோம். கடன் கொடுத்தவரிடம் ஆரம்பக் காலத்தில் அவருடைய தயவை எதிர்பார்த்தோம். வக்கீல் தலைப்பாடாக அடித்துக் கொண்டும் கோர்ட்டில் குறித்த காலத்தில் ஒரு சர்டிபிகேட்டைக் கொடுக்கவில்லை. பரீட்சைக்குப் பணம் கட்டிவிட்டு படிப்பதற்குப் பதிலாக வேறு வேலைகளைக் கவனித்தோம் என்பது தெரியவரும். சிலவற்றை

அப்பொழுது சரி செய்யலாம். மற்றவை காலம் கடந்ததாக இருந்தால், மனத்தில் உணர்வுபூர்வமாகச் சரி செய்யலாம். அன்று செய்யத் தவறியதை இன்று உணர்ந்தால், உணர வேண்டிய அளவுக்கு உணர்ந்தால், செயலால் தவறியது உணர்வால் இன்று பூர்த்தி பெறும். அப்படிச் செயலாலும், உணர்வாலும், அறிவாலும், அன்று செய்தவற்றை இன்று முடிந்தவரை **(to the point of exhaustion)** பூரணமாகப் பூர்த்தி செய்துவிட்டு, மீண்டும் பிரச்சனையைப் பரிசீலனை செய்தால், தீர்வு காண வழி ஏற்பட்டது போன்ற உணர்வு தட்டுப்படும். ஏற்பட்ட வழிகளை எல்லாம் பயன்படுத்தி மேலும் மேலும் செயல்பட்டுக் கொண்டேயிருந்தால், நம்பிக்கை சிறிது வளர்வதும், சில சமயங்களில் தளர்வதும் தெரியும்.

‘என்னைக் கேட்கவில்லை; கொடுக்கமாட்டேன் என்று விட்டு விட்டார்கள். நான் என்றுமே வாங்கிய பணத்தை இல்லை என்று சொல்லவில்லையே’ என்று கடன்பட்டவர் சொன்னதாக ஒரு சேதி வரும். 40 வயதை 45-ஆக மாற்றப்-போகிறார்கள்; 4 பரிட்சையை 6-ஆகச் செய்யப்போகிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். சில சமயங்களில் நம் முயற்சிக்கு ஏற்ப நல்ல மாறுதல்கள் சிறிது, சிறிதாக வந்துகொண்டிருக்கும். வேறு சில சமயங்களில் கடைசிவரை பிரச்சனை கிணற்றில் போட்ட கல்போல இருக்கும். நம்மால் இன்று முடிந்ததைச் செய்தபின், இன்னும் கொஞ்சம் முயல இடம் இருக்கிறது என்பதுபோல் பிரச்சனை வழிவிடும். அதையும் உடனே பூர்த்தி செய்ய வேண்டும்.

நம்பிக்கை வளரும் நிலையும் உண்டு; தளரும் நிலையும் உண்டு. விடாமுயற்சி, நம்பிக்கையை உற்பத்தி செய்யும் என்று அன்னை கூறுகிறார். நம்பிக்கையை வளர்க்க எல்லா முயற்சி-களையும் தவறாது செய்ய வேண்டும். எத்தனை நாளான பிரச்சனையானாலும், எவ்வளவு பெரிய சிக்கலானாலும், எல்லா நிலைகளிலுமே கைவிடப்பட்டன ஆனாலும், எனக்கு அன்னை மீது நம்பிக்கையிருக்கிறது; நான் தொடர்ந்து முயல்வேன்; முடிந்தவரை செய்வேன்; நடப்பனவெல்லாம் நல்லனவே.



அன்னையை ஏற்றுக்கொண்டபின், என் குறைகளை விலக்கிய-பின், என் முயற்சியைப் பூர்த்தி செய்தபின் எப்படிப் பிரச்சனை தீராமலிருக்கலாம்? நிச்சயமாகத் தீரும். அத்துடனில்லாமல் அதன் மூலம் வேறு நல்லதும் நடக்கும் என்று நமக்கு நாமே அன்னை சொல்லியவற்றை நினைவுபடுத்திக்கொண்டு தொடர்ந்து முயன்றால் பலன் அபரிமிதமாக இருக்கும்.

என் வீட்டுக்காரர் இதுவரை பல உத்தியோகங்களில் மாறி விட்டார். இந்த முறையும் பழைய வேலை போய்விட்டது. அடுத்த வேலை எப்பொழுது கிடைக்குமோ தெரியவில்லை. இந்த முறை நான் அன்னை பக்தரானபின்னால் வேலை போய்விட்டது. அப்படி என்றால் என்ன பொருள்? பொருளிருக்-கட்டும், நான் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளப்போகிறேன்’ என்று சொல்லிய பெண்ணுக்குப் புதிய நிலைமை உருவாகி, வீட்டுக்காரருக்கு ஒரு பெரிய கம்பெனியில் வேலை கொடுப்பதாகச் சொன்னார்கள். அவர் போனார்; இல்லை என்றார்கள்; வந்து சோர்ந்து வீழ்ந்துவிட்டார். அப்பெண்மணி கணவர் சொல்லியதை ஏற்றுக்கொள்ளவில்லை. எனக்கு நம்பிக்கையிருக்கிறது. நிச்சயம் வேலை கிடைக்கும் என்று கணவரிடம் சொன்னார். கணவர் வெளியே போனார். அந்தக் கம்பெனியிலிருந்து அவரை வரச் சொல்லி தகவல் வந்தது. வெளியே போனவர் எப்படியோ அக்கம்பெனிக்குப் போனார். வேலை கிடைத்தது. போன வேலை 2,500 ரூபாய் சம்பளத்தில். கிடைத்த வேலை மூவாயிரத்தில். பின்னர் மேலும் சில ஆயிரமும் உண்டு என்று தெரிந்தது. தளராத நம்பிக்கையின் பலன் அது.

அலசி, அலசிப் பார்த்தால் முதலில் நமக்குப் பிரச்சனை தீராது என்று நம்பிக்கையிருப்பது தெரியும். அதைத் தகர்த்து எறிந்தபின், நமக்கு வேறு விஷயங்களில் நம்பிக்கையிருக்கிறது; சிபாரிசு இல்லை, அதனால் நடக்காது; பணமில்லை, அதனால் நடக்காது; பட்டமில்லை; அதனால் முடியாது; நமக்கு இவை போன்ற விஷயங்கள் கூடிவரா என்பன போன்று 10, 20 தடைகள் இருப்பது தெரியும். முள்ளின் மேல் விழுந்த துணியை

எடுப்பதுபோல் ஒன்றொன்றாய் மெதுவாக எடுக்க வேண்டும். அந்த நிலையில் நாம் செய்யக்கூடிய பெரிய காரியங்கள் இரண்டு, சிறிய காரியங்கள் இருபது விட்டுப்போய் இருப்பது தெரியும். அவற்றையெல்லாம் ஒன்றுவிடாமல் இப்பொழுது சரி செய்தால், மீண்டும் நம்பிக்கை தளர்வது தெரியும். இதெல்லாம் முடியுமா என்று ஒரு கேள்வி நிமிஷத்திற்கொரு முறை எழுந்தபடி இருக்கும். இதுவும் முடியும்; இதற்கு மேலும் முடியும் என்று அந்தக் கேள்விக்கு அது நிற்கும்வரை அயராது பதில் சொல்லிவிட்டு மேலே போய்க்கொண்டேயிருக்க வேண்டும்.

நம்பிக்கையை வளர்த்துக்கொண்டு, நம்மால் விட்டுப்-போனதை எல்லாம் பூர்த்தி செய்துகொண்டே நாம் அங்குலம், அங்குலமாக முன்னேறினால், அங்குலம் அடியாகி, அடி மைலாகி பிரச்சனை பூர்த்தி ஆகும். ஒருவர் அன்னைக்குச் சேவையாக 300 பிரதி புத்தகங்கள் விற்பனை செய்ய முன்வந்தார். 3 பிரதி விற்பதற்குரிய கஷ்டத்தைப் பார்த்துப் பிரமித்துவிட்டார். வீட்டில் 3 பேர் சேர்ந்து பிரயத்தனம் செய்து 50, 70, 100 என்று தாண்டி 141-க்கு வந்த சமயம் ஒரு லைப்ரரி 147 புத்தகங்கள் வாங்கிக்கொள்ள முன்வந்து அவர்கள் குறிக்கோளைப் பூர்த்தி செய்தது. கடைசிவரை கிணற்றில் போட்ட கல் போல இருந்த பிரச்சனை திடீரென மாறி முழுப் பலன் கொடுத்ததும் உண்டு. எந்த வகையானாலும் பலன் உண்டு; முழுப் பலனும் உண்டு. அதற்கு மேலும் எதிர்பாராத பலனும் உண்டு. நம்பிக்கை ஒரே ஒரு முறையும் வீண்போவதில்லை.

*வாழ்க்கை:*

வாழ்க்கைக்குச் சில நியதிகள் உண்டு. சில ஆற்றல் உண்டு. பல ஆற்றல்களுடன் சில பேராற்றல்களும் உண்டு. அவையெல்லாம் நமக்குப் பாடம். மனப்பாடமாகவும் தெரியும். அதன் சாரமாக மக்கள் அறிந்தவை சில; அதிர்ஷ்டம் வேண்டும்; பணம் வேண்டும்; பணத்தைச் சேர்த்துவிட்டால் மற்றவை-யெல்லாம் தாமே வரும்; நேர்மையாகப் போனால் காரியம்



நடக்காது. ஒத்துவரும்வரைதான் நேர்மையைச் சேர்த்துக்-கொள்ள வேண்டும்; காரியத்தை முடிக்கப் பாடுபட வேண்டுமே தவிர மற்றவற்றிற்கெல்லாம் இங்கு வேலையில்லை.

இவையெல்லாம் மட்டமான மனிதர்களுடைய கோட்பாடுகள் இல்லை. பொதுவாக எல்லா மனிதர்களுக்கும் உள்ள மனப்பாங்கு. விதிவிலக்காக இலட்சியப்புருஷர்கள் உண்டு. இலட்சியமாக வாழ்ந்து இலட்சணமாக இருந்தவர்கள் குறைவு. இலட்சியத்தை ஏற்றுக் கொண்டதால் திரு.வி.க.வையே அலட்சியம் செய்தது சமூகம். வறுமையில் இறந்தார் திரு.வி.க. கடைசி காலத்தில் வறுமையில் வாழும் நேரத்திலும் வீடு தேடி வந்த பெரிய தொகையை, ‘என்னால் பிறருடைய உதவியை ஏற்றுக்கொள்ள முடியாது’’ என்று சொல்லித் திருப்பி அனுப்பியவர் அவர்.

நேர்மையாக இருந்தால் மனம் நிம்மதியாக இருக்கும். ஆனால் நாமறிந்த வாழ்க்கையில் நேர்மைக்குப் பிரதிபலன் வெற்றியாகவோ, பொருளாகவோ கிடைக்காது. மனச்-சாட்சியைச் சுத்தமாக வைத்துக் கொண்டால் போகின்ற கதி நல்ல கதியாகும். சுத்தமான மனச்சாட்சிக்கும், வாழ்க்கை வளத்திற்கும் நேரடியாகத் தொடர்பு கிடையாது. செல்வம் மற்ற விஷயங்களைப் பொறுத்தது. மனச்சாட்சியைப் பொறுத்த-தில்லை. வாழ்க்கையில் சத்தியம், நேர்மை, தூய்மை, பக்குவம், பவித்திரம், லட்சியம், கற்பு இவற்றுக்குப் பலன் நிம்மதியான மனம் ஆகும். இவையெல்லாம் ஒருவர் பின்பற்றுவதால், அவருடைய தொழில் வளப்படும் என்பதில்லை; ஒரு வகையில் பாதிக்கப்படலாம்.

நம் வாழ்வில் தீராத பிரச்சனையை எடுத்து, இன்று கடந்த காலக் குறைகளை மனதில் நிவர்த்தி செய்தால், என்ன பலன் கிடைக்கும்? மனத்திற்கு ஒரு தெளிவு ஏற்படும். அதற்குமேல் ஒன்றும் கிடைக்காது. தோற்றுப்போன நியாயமான கேஸை ஆராய்ந்து, நாம் செய்யத் தவறியவற்றை உணர்ந்தால், மீதி நாட்களும் அதைத் திருப்பித் திருப்பிப் பேசிக்கொண்டி-ருக்கலாம்; ஆவது ஒன்றுமில்லை. இன்று புதிய அறிவு வந்துவிட்டதால், கடந்த காலச் செயல்களை மாற்றும் திறன்

அறிவுக்கில்லை. புதிய நல்லுணர்வு ஏற்பட்டதால் செய்த தவறுகள், பட்ட நஷ்டங்கள் மாறிவிடா.

ஆனால் அன்னையின் ஆத்மிகச் சக்தி உலகுக்குப் புதியது. இதுவரை வாழ்க்கைக்கு இல்லாத திறனைக் கொடுக்கிறது. புதிய அறிவு ஏற்பட்டால், புத்துணர்வு பிறந்தால், அதன் மூலம் அன்னையின் சக்தி பழைய குறைகளை நிறைவு செய்யும்; பழைய நஷ்டங்களை ஈடு செய்யும். அந்த வல்லமையை வாழ்க்கைக்கு அன்னையின் ஆன்மிகச் சக்தி இன்று அளித்துள்ளது. அந்தச் சக்தியால் இன்று நாம் பலன் பெற வேண்டும். தீராத பிரச்சனையைத் தீர்க்க வேண்டும். அதை முடிக்கப் பல்வேறு உபாயங்களை அன்னை கூறுகிறார். இங்கு நாம் கருதுவது நம்பிக்கை என்ற கருவியை மட்டுமே. நம்பிக்கையை வளர்ப்பதன் மூலம் அன்னையின் சக்தியைப் பயன்படுத்தி இதுவரை உலகத்தில் நடக்காத ஒன்றை நம் வாழ்க்கையில் எப்படி நடத்திக் கொள்வது என்பது மட்டுமே இங்குக் கருதப்படுகிறது.

தீராத பிரச்சனை ஒன்றை எடுத்துக்கொள்வோம். அது அன்னையால் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்திக் கொண்டு, அன்று அப்பிரச்சனையில் நம் குறைகளைக் கவனித்து இன்று அவற்றை அறிவாலும், உணர்வாலும் மயிரிழை பாக்கியில்லாமல் நிறைவு செய்து, பிறகு அன்னைக்குப் பிரார்த்தனை செய்தால், அப்பிரச்சனை தீரும் என்று சொன்னேன். மேலும் ஒன்று. ஒரு பிரச்சனை தீரும்பொழுது 10, 15 கட்டங்களைத் தாண்டிவரும். ஒவ்வொரு கட்டத்திலும் நம்முன் ஒரு பிரச்சனை தோன்றும். அதற்கு இரு வழிகள் தென்படும்; ஒன்று பழைய வழி, மற்றது புதிய அன்னை வழி. எந்தக் கட்டத்தில் பழைய வழியை நாடுகிறோமோ அதே கட்டத்தில் எல்லாம் நின்றுவிடும்.

உதாரணமாக, 15 ஆண்டுகளாகக் குடும்பத்தை வாட்டிவரும் கடன், மேற்சொன்ன முறையைக் கையாண்ட ஒருவருக்கு புதிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டு 50,000 பெறுமான அவருடைய நிலம் 6 இலட்சத்திற்கு விலைக்கு வருகிறது. இந்த நிலையில்



அவருக்கு இரண்டு விஷயம் தோன்றுகிறது. ஒன்று, கடனையெல்லாம் அடைத்து விட்டு, மகள் திருமணத்தை முடித்துவிட்டு, மீதிப் பணத்தை குடும்பத்திற்கு உதவியான நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்துவது. மற்றொன்று, நமக்கில்லாத பெருமையைத் தேடி செலவு செய்ததால்தான் இவர் தலைமுறையில் 15 காணி நிலத்தை விற்கும் இந்தக் கடன் எல்லாம் வந்தது. 3 வேளை நல்ல சாப்பாடு சாப்பிட முடியாத நிலையில் குடும்பம் இருப்பதை எல்லோரும் அறிவார்கள். தூரத்து உறவு கல்யாணத்திற்குப் போய், நம்மிடம் அவர்கள் எதிர்பாராத பெரிய பிரஸண்டேஷன் கொடுக்க மனம் துடிக்கிறது. அந்தப் பழைய குணம் தலைதூக்குகிறது. இதற்கு இடம் கொடுத்துவிட்டால், 6 இலட்சம் கேட்டவர் வேறொரு நிலத்தை வாங்கிக்கொள்வார். வந்தது போய்விடும். புதிய நிலைமை உருவானபின் அன்னை வழியாக, நல்ல காரியங்களை மட்டும் ஒவ்வொரு கட்டத்திலும் கைக்கொள்ள வேண்டும். அதற்குரிய வகையில் நம்பிக்கையின் தரத்தை அவ்வப்பொழுது உயர்த்திக்கொள்ள வேண்டும்.

ஒரு கட்டத்தில் ‘என் மரியாதை என்னாவது’ என்று ஒரு கேள்வி எழும். அதைக் கருதினால் கிடைப்பது மரியாதையில்லை. காரியம் கெட்டுவிடும். சில சமயங்களில் மரியாதை தேடியவனுக்கு அவமரியாதை கிடைக்கும்.

அன்னையின்மீது நம்பிக்கை வைத்து, புதிய நிலைமை ஏற்பட்டு, இரண்டு கட்டம் தாண்டியபின் தன் திறமைமீது நம்பிக்கை தலைதூக்கும். நம் திறமையைச் செயல்படுத்திவிட்டு, நம்பிக்கையை அன்னைமீது வைக்க வேண்டும். இல்லை என்றால் திறமைக்கு மீண்டும் ஒரு தோல்வி ஏற்படும். பங்காளி துரோகத்தால் கைவிட்டுப் போன சொத்து அன்னைமீது நம்பிக்கை வைத்து மீண்டும் வரும் பொழுது பங்காளிமீது பெருமைக்காக அனுதாபம் ஏற்பட்டு விட்டுக் கொடுக்கத் தோன்றும். இது பெருந்தன்மையன்று; பெருமையைத் தேடும் புத்தி. அதற்கு உறவு, பாசம் ஒரு சாக்கு. அதற்கு இடம் கொடுத்தால் மீண்டும் பங்காளிக்குத் துரோகம் செய்ய இடம்

கிடைக்கும். அன்று நமக்குப் பிரச்சனை ஏற்பட்டபொழுது சமூகம் வாயடைத்துப்போயிருந்தது. இன்று ஒரு கட்டத்தில் சமூகத்தின் நேர்மையின்மீது நம்பிக்கை வைத்துச் செயல்பட மனம் விழையும். அதற்கு இடம் கொடுக்காமல் அன்னைமீது நம்பிக்கையை அடுத்த கட்டத்தில் புதுப்பித்துக்கொண்டு, நம் கடமையை மட்டும் சமூகத்தில் செய்து, பிரச்சனை முழுவதையும் தீர்க்க முனைய வேண்டும். ஒரு கட்டத்தில், ஏற்கனவே காலை வாரிவிட்ட சட்டத்தை நம்பத் தோன்றும். 10 முறையும் பொய்த்துப்போன சிபாரிசு, அந்தஸ்த்தை மீண்டும் மனம் ஒரு பொருட்டாகக் கருதும். விட்டுக் கொடுத்தே **(compromise)** இன்று இப்பிரச்சனைக்கு ஆளாகியிருந்தாலும், 8-ஆம் கட்டத்தில் கொஞ்சம் விட்டுக் கொடுக்க மனம் துடிக்கும். தந்திரமான யுக்திகள் தலைகீழாகவே இதுவரை வேலை செய்திருக்கின்றன. எனினும் ஒரு யுக்தியைக் கையாளத் தோன்றும்.

அன்னை வழியைத் தெரிந்துகொள்ளுதல் சிரமம் இல்லை; கடைப்பிடிப்பது சிரமம். 'தான்' என்பது வரும்பொழுது அதை விலக்கி, தெய்வத்தை நம்ப வேண்டும். தன் திறமையில் நம்பிக்கை ஏற்பட்டால், திறமை ஒரு கருவியே. 'நம் நம்பிக்கையை அன்னையின் அருள்மீது வைக்க வேண்டும்' என்று சொல்லிக்கொள்ள வேண்டும். ஏற்கனவே காலை வாரிவிட்ட பாசம் ஏற்பட்டு பிரச்சனை எழுந்தால், கடமையையும் நேர்மையையும் பூர்த்தி செய்வது அவசியம் என்று உணர வேண்டும். நாலு பேருடைய நியாய மனப்பான்மையை நம்ப வேண்டிய நேரம் வந்தால், நம்பிக்கையை அதிலிருந்து மாற்றி அன்னையை நம்ப வேண்டும். சட்டம் தலைதூக்கினால், அதையும் புறக்கணித்து அன்னையை நம்ப வேண்டும். சிபாரிசு, அந்தஸ்து, யுக்தி, ஆகியவற்றை எந்தக் கட்டத்திலும் கருதாமல், ஏற்கனவே அவை பயன்படாததை நினைவுபடுத்திக்கொண்டு, கடைசி-வரை, பிரச்சனை முழுவதுமாகத் தீரும்வரை ஒவ்வொரு கட்டத்திலும் அன்னையை மட்டும் நம்பி, அந்த நம்பிக்-கையைப் பேணி, வளர்த்து சிறப்பான முடிவை அடையலாம்.



*நம்பிக்கை:*

அன்னையிடம் வந்தபின் நல்லவையே நடக்கும். நடப்பவை நல்லதாக அறிவுக்குப் புலப்படாவிட்டால், நாளாவட்டத்தில் அந்த நல்லது கண்ணுக்குத் தெரியும். இன்று புரியவில்லை என்றால் புரியும் பொழுது அது பெரிய நன்மையாக விளங்கும். சிறிய நன்மைகள் உடன் விளங்கும். இன்று விளங்காவிட்டால் அவை பெரிய நன்மையாக இருக்கும்.

தொடரும்...

## ஜீவிய மணி

*அன்னையை ஏற்று வாழ்வின் ஒரு பகுதியில் வெற்றி கண்டவர்கள் வாழ்வின் முழுமையை நாடினால், அவர்கட்கு அதற்கு உரிய முயற்சி இருந்தால், அன்னை தரும் பலன் அபரிமிதமானது. ஆபீசே கதி என்பவர் அங்கு வெற்றி பெற்ற பின் குடும்பத்தையும் கவனிக்க முயன்றால், 'ஒன்றைச் சமாளிக்கலாம், இரண்டை நினைத்தால் உள்ளதும் போகும்' என்று பயப்படுவார். அப்படிப் பயப்படாமல் முழுமை என்ற கருத்தைப் புரிந்து கொண்டால், இரண்டும் பலிக்கும். சிறியவை, மட்டமானவை, தவறானவை மனத்தாலும் விலக்கப்பட வேண்டும். மனதில் குறை இல்லாதவருக்கு அன்னை வாழ்வில் தோல்வி என்பதேயில்லை. வெற்றி மட்டும் உண்டு. ஆரம்ப நிலையில் அது அதிர்ஷ்டமாக இருக்கும். முடிவில் அது அன்னை அதிர்ஷ்டமாக இருக்கும். வாழ்வின் ஒரு பகுதியில் சிறப்பெய்துவது அதிர்ஷ்டம். எல்லாப் பகுதிகளிலும் எல்லா வகைகளிலும், எல்லா அம்சங்களிலும், எல்லா நேரங்களிலும் பெறுவது அன்னை அதிர்ஷ்டம். அதிர்ஷ்டத்தை அனைவரும் நல்ல மனதால் பெறலாம். முழு முயற்சியுடையவர் நம்பிக்கையால் அன்னை அதிர்ஷ்டத்தைப் பெறலாம். அதற்கு உரிய அம்சத்தையே வாழ்வின் முழுமை என்றேன். இது புரிய வேண்டுமானால், நாம் செய்யும் காரியங்கள் முழுப் பலன் தர வேண்டும். செய்யும் காரியம் சிறப்பாகக் குறைவில்லாமல் இருக்க வேண்டும். நம்மோடு பழகிய எவரும், உறவினர், நண்பர், ஆபீசில் உள்ளவர்கள் மீண்டும் நம்மைப் பிரியமாக நாடி வர வேண்டும்.*

## அன்பர் அனுபவம்

P. நடராஜன்

ஸ்ரீ கர்மயோகி அவர்களின் நூல்களை ஊன்றிப் படிக்கப் படிக்க, அவ்வெழுத்துகள் நம் அன்றாட வாழ்வில் நம்மை வழிநடத்துபவையாகவும், தெளிவினைத் தருபவையாகவும், நம்மைச் சீர்திருத்துபவையாகவும் அமைகின்றன. அப்படி அமைந்த சில அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

### பூமராங்

நாங்கள் முன்பு குடியிருந்த வீட்டிற்குப் பக்கத்து வீட்டில் நாய்களை வளர்த்து வந்தனர். புதியதாக ஒரு ஜெர்மன் ஷெப்பர்டு நாயை வாங்கி, அதை அவர்கள் வீட்டு மாடி தளத்தில் டிரைனர் கொண்டு பழக்குவது வழக்கம். நாங்கள் இருந்தது முதல் தளம். இரண்டு வீடுகளுக்கும் இடைவெளி சற்று குறைவு. காண்பவர்கள் பயப்படும் அளவிற்குப் பெரிய நாய் அது. சில நாட்களில், அந்த நாய் தனது முன்னங்கால்களை எங்கள் வீட்டுப் பக்கம் தடுப்புச் சுவரின்மீது வைத்தபடி நின்று கொண்டு இருக்கும். வீட்டிற்குப் பின்புறம் மாலை வேளையில் எனது மனைவி நடப்பது வழக்கம். அப்படி நடக்கும் பொழுது தலையை மட்டும் நீட்டி எட்டிப் பார்க்கும் நாயைப் பார்த்து பல முறை திடுக்கிட்டு நெஞ்சு படபடக்க பயந்திருக்கிறாள்.

அலுவலகம் விட்டு வீடு திரும்பினால், என்னிடம் இதுகுறித்து குறைபடுவாள். ‘பணம் இருக்கிறது என்பதனால் ஒன்றுக்கு நான்கு நாய்களை வைத்துக் கொண்டு அடுத்தவர்களுக்குத் தொந்தரவு தரும்படியாய் ஏன்தான் இப்படி இருக்கிறார்களோ? மொட்டை மாடியில் ஸ்பெஷல் டிரைனர் வைத்து டிரைனிங் வேறு’ என்று பக்கத்து வீட்டாரையும் அந்த நாயையும் வசை பாடுவாள்.

‘அவர்கள் வீட்டில் அவர்கள் வளர்க்கிறார்கள். விடு. இனி பின்புறம் செல்வதற்குமுன் அந்த நாய் உள்ளதா எனப் பார்த்து பிறகுபோ’ என்றேன். சமாதானம் ஆகாமல் ‘அப்படிப் பார்த்துவிட்டுத்தான் செல்கிறேன். ஒரு சுற்று வந்து அடுத்த சுற்று வரும் பொழுது அந்த இருட்டில் யாரோ மனிதர் நின்று உற்றுப் பார்ப்பதுபோல் உள்ளது. தனியாக இருப்பதால் பயமாக உள்ளது’ என்றாள்.

ஒரு நாள் அலுவலகம் சென்று திரும்பி வந்த பொழுது, மகிழ்ச்சியான செய்தி ஒன்று என்று ஆரம்பித்தாள். ‘பக்கத்து வீட்டு நாய் தொந்தரவு ஒரு வழியாய் தீர்ந்தது’ என்றாள். என்னாயிற்று என்றதற்கு, அந்த நாய் வழக்கம் போல் தடுப்புச் சுவரைத் தாண்டி எட்டிப் பார்த்து கொண்டிருந்தது. கீழ் வீட்டில் வளர்க்கும் பூனை போவதைப் பார்த்து அதைப் பிடிக்க மாடியில் இருந்து நாய் தாவும் பொழுது வீட்டின் சன் ஷேடு மூக்கில் இடித்துக் கீழ் வீட்டுத் தோட்டத்தில் விழுந்துவிட்டது. மூக்கில் அடிபட்டு வீட்டின் பின்புறமாக கீழ்வீட்டிற்குள் வந்துவிட்டது. வீட்டுப்பிள்ளைகள் அவர்களது அம்மாவுடன் அலறி அடித்துக் கொண்டு அறைக்குச் சென்று தாளிட்டுக் கொண்டனர். ஹாலில் இருந்தவர்கள் சோபாவின் சாய்வு விளிம்பில் ஏறி நின்று கொண்டு என்ன செய்வது என அறியாமல் திகைப்பில் இருந்தனர். பின் போன் செய்து பக்கத்து வீட்டுக்காரர் வந்து நாயை அழைத்துக் கொண்டு போனார். பக்கத்து வீட்டுக்காரர்களை எங்கள் வீட்டுச் சொந்தக்காரர் மிகவும் கடிந்து கொண்டார்.

ஆஸ்பிட்டலுக்கு அழைத்துச் சென்று மூக்கில் பிளாஸ்திரியோடு நாய் காரில் வந்து இறங்கியது. பார்க்கப் பாவமாய் இருந்தது. இனி தொந்தரவில்லை என்றாள். மேலும் சந்தோஷமாய் என் தம்பி ஊரிலிருந்து வருகிறான் என்றாள்.

இரவு 7 மணியிருக்கும் போது, தெருவில் நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டது. மனைவியைக் கூப்பிட்டு நாய்கள் புதியதாக யாரையோ பார்த்துக் குரைக்கிறது. கடித்தாற்போல குரைக்கிறது. உன் தம்பியாக இருக்கப் போகிறது. போய்ப் பார் என்றேன்.

ஓடிச் செல்வதற்குள், அவள் தம்பி கணுக்காலில் பேண்ட் கிழிப்பட்டிருக்க மாடிப் படியில் ஓடி வந்துவிட்டான். தெருவில்

உள்ள நாய்களில் பக்கத்து வீட்டுக்காரர் வளர்க்கும் நாட்டு நாயும் ஒன்று. அதுதான் அவள் தம்பியின் கால்களைக் கவ்வியுள்ளது.

மனைவி தான் நாய் அடிபட்டது குறித்து சந்தோஷப்பட்டது தவறு என ஸ்ரீ அன்னையிடம் கூறினாள். கீழ் வீட்டிலிருந்த நர்ஸ் சத்தம் கேட்டு வந்து, இன்ஜெக்ஷன் போட்டுவிட்டு லேசாக பல் பட்டிருக்கிறது. கடியில்லை. பயப்பட வேண்டாம் என்றார்.

**Our outward happenings have their seed within - Savitri**

★★★

**ஏற்புத்திறனும் சூழலும்**

மனதை உறுத்தும் விஷயம் ஒன்றை அன்னை வழியில் தீர்க்க விரும்பினேன்.

நான் தற்பொழுது இருப்பது இரண்டாம் தளம். கட்டிட கிரகப்பிரவேசம் அன்றே நாங்கள் குடி வந்தோம்.

பிறகு சில மாதங்கள் கழித்து, முதல் தளத்தில் ஒரு மகாராஷ்டிரா குடும்பம் குடி வந்தது.

முதலில் அவர்களோடு பேசிவந்த மனைவி, மொட்டை மாடியில் துணி காய வைக்கக் கொடி கட்டுவது தொடர்பாக ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால், பின்பு பேசுவது இல்லை. நான் அவரை எதிரில் பார்த்தால் புன்னகை செய்வேன். அவசியம் இருந்தால் பேசுவேன்.

குடி வந்த நாளில் இருந்தே எங்களது வாகனத்தை போர்டிகோ பில்லர் அருகில் நிறுத்துவது வழக்கம்.

மேலும் மனைவி சற்று குள்ளமாக இருப்பதால், வண்டியை ஓட்டிக்கொண்டு ஏற்றி நிறுத்த ஏதுவாய் அந்த இடத்திலேயே நிறுத்தி வந்தோம்.

சில தினங்களாக, அவர்களுடைய இரு வண்டிகளில் ஒன்றை நாங்கள் நிறுத்தும் இடத்தில் நிறுத்தினார்கள்.



ஒன்றரை வருடங்களாக எங்களது வண்டிக்கு அடுத்தாற்போல் நிறுத்தியவர், தற்போது ஏன் இவ்வாறு நிறுத்துகிறார் என்பது தெரியவில்லை.

மனைவியோ அவர்களது வண்டியைத் தள்ளி வைத்து விட்டு நிறுத்துங்கள் என்றாள். 'நான் பொறுமையாக இரு, வம்பு வேண்டாம்' என்றேன்.

ஒரு நாள் நான் வெளியில் சென்றிருக்கும் வேளையில், குழந்தையை பள்ளியில் இருந்து அழைத்து வந்த மனைவி, 'அமைதியைக் கடைப்பிடி' என்ற என் அறிவுரையைப் புறக்கணித்து அவர்களது வண்டியைச் சற்றுத் தள்ளி நிறுத்திவிட்டு எங்களது வண்டியை நிறுத்தினாள்.

மீண்டும் அன்றிரவும் அப்படியே நிறுத்தினோம்.

மறு நாளன்று, நிறுத்திய இடத்திலிருந்து முரட்டுத்தனமாக இழுத்துத் தள்ளி நிறுத்தப்பட்டிருந்தது எங்களது வண்டி.

மேலும் **Side Mirror** மூர்க்கமாக திருப்பி நெளிக்கப்பட்டிருந்தது. **Head light doom** கூர்மையான பொருளால் குத்தி உடைக்கப்பட்டு இருந்தது. மேலும் வண்டி **fiber body**, காலால் உதைத்து உடைக்கப்பட்டு, வண்டி முழுவதும் லூசாக ஆடுகிறது. பம்பர் இழுத்து நெளிக்கப்பட்டு இருந்தது.

முதல் தளத்தில் இருப்பவரிடம் (பார்சல் சர்வீசில் மேனேஜர்), ஏன் இவ்வாறு வண்டிக்கு சேதம் விளைவித்தீர்கள். உங்கள்மீது எவ்வளவு மரியாதை வைத்திருந்தேன். நீங்கள் இவ்வாறு செய்ததை என்னால் ஏற்க முடியவில்லை. மனைவியின் உயரத்திற்கு அந்த இடம் சௌகரியமாக இருப்பதால்தான் அங்கு நிறுத்துகிறோம். மேலும் நீங்கள் உங்கள் வண்டியை எடுப்பதே இல்லை. நாம் இருவரும் வாடகைக்காரர்களே தவிர விரோதிகள் இல்லை. ஏன் இப்படிச் செய்தீர்கள் என்று கேட்டேன்.

அவரோ, 'உன் மனைவி வீட்டில்தானே இருக்கிறாள். எங்களது வண்டியின் சாவி கேட்டு வாங்கித் தள்ளி வைக்க வேண்டியதுதானே. உன் மனைவி தள்ளி வைத்ததால் எங்கள்

வண்டியும் சேதம் ஆகி உள்ளது' என்று சொல்லிவிட்டு உள்ளே போய் விட்டார்.

வீட்டு உரிமையாளரிடம் விஷயத்தைத் தெரியப்படுத்தினேன்.

ஒருவர் வெறி கொண்டு தாக்கும் அளவுக்கு வெறுப்பை சம்பாதித்து உள்ளோமே என்றும், வண்டி சேதம் ஆகிவிட்டதே என்றும் கவலையாக இருந்தது. நான்கு நாட்களாக மனமும் உணர்வும் சரி இல்லை.

அன்னை வழியில் நான் இனி என்ன செய்வது?

முதல் தளத்தில் உள்ள வட இந்தியரை, அன்னை வழியில் எப்படி எதிர் கொள்வது?

சொல்பேச்சு கேளாமல், 'என்னால் உங்களைப் போல் எல்லோருக்கும் கூழைக்கும்பிடு போட முடியாது; வண்டி சேதமாகியுள்ளது என்றால், என்னிடம் ஏன் கேட்கிறீர்கள்? உடைத்தவரிடம் போய்க் கேளுங்கள்' எனக் கூறும் மனைவிக்கு அன்னை வழியில் விஷயத்தை எப்படிப் புரிய வைப்பது?

ஏன் எனக்கு இப்படி ஒரு நிகழ்வு? இந்தச் சூழலை நான் என் அக முன்னேற்றத்திற்கு எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது? என்றெல்லாம் கேள்விகள் துளைக்கத் தூக்கமில்லாது தவித்தேன். முதல் தளத்தைக் கடக்கும் போதெல்லாம், வண்டியைப் பார்க்கும் போதெல்லாம் எரிச்சல் எழுந்தது.

ஸ்ரீ கர்மயோகி அவர்களின் புத்தகத்தைப் பிரித்தேன். 'அருள் வரும்பொழுது ஏற்புத்திறன் குறைவாக இருந்தால் அருளை நம் சுபாவம் எதிர்க்கும்' என்றது. **Absolute Non-reaction is necessary.** எரிச்சல், கோபம் எழாது இருக்க வேண்டும் எனக் கொண்டேன். நான் பார்த்து வந்த வேலையில் நான்கு மடங்கு கூடுதல் ஆர்டர் கிடைக்கயிருப்பதாகச் செய்தியைக் கேட்டு, பலனை மதிப்பு போட்டு மறுத்தது, பொருமியது நினைவுக்கு வந்தது. மனம் அடங்காமல் stress-உடன் அலுவலகத்தில் வேலை செய்தால் வீட்டில் சுமுகக் குறைவு ஏற்படும் என்றும் படித்தேன். வந்த ஆர்டர் அடுத்தவருக்குப் போனது.



மேலும் கூடுதல் ஆர்டர்கள் நான் வேலை பார்த்த அலுவலகத்திற்குக் கிடைக்க இருந்தது தெரியவந்தது. மறுநாள் வண்டியின் இரண்டு டயர்களிலும் ஆணி அடித்து பஞ்சர் ஆகியிருந்தது. இம்முறை அவரிடம் எதையும் கேட்கவில்லை. மனதைச் சாந்தப்படுத்தி அழுத்தமான அமைதியுடன் இருந்தேன். வேலையிலும் **reaction** இன்றி சமநிலையில் இருப்பது என இருந்தேன். வண்டியைச் சரிசெய்ய 2000 ரூ. மேல் செலவானது.

கோபம், எரிச்சல், உறுத்தல் மறைந்தது. வேலையும் வருமானமும் அதிகரித்தது.

அடுத்த இரண்டு மாதங்கள், கீழ் வீட்டுக்காரர் வேலைக்குப் போகாது வீட்டிலேயே இருந்தார். திடீரென்று கல்கத்தாவிற்கு மாற்றல் என காலி செய்து போய்விட்டார். சாதாரணமாக மாற்றல் 4 வருடங்களுக்கு ஒரு முறைதான் வரும் என அவர்கள் கூறக் கேள்விப்பட்டிருக்கிறோம். நாம் மாறியதும் பிரச்சனைக்-காரர்களையும் அன்னை நம்மை விட்டு அகற்றிவிடுகிறார்.

மேலும் இந்த விஷயம், என் அகத்திற்கும் புறத்திற்குமான தொடர்பை எனக்கு நன்கு விளக்கியது.

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உலகில் நடைபெறும் அனைத்தும் அவன் செயல் என்பதால், அவனது திருவுள்ளம் தானே உலகில் பூர்த்தியாகிறது எனலாம். குசேலரும், கிருஷ்ணனும் ஒரே ஆசிரியரிடம் பயின்றாலும் வெவ்வேறு பலனை அடைந்தார்கள். இறைவன் அருள் பொதுவாக உலகில் செயல்படுகிறது. அதற்குட்பட்ட மனிதன் தன் திறமைகளால் முன்னேறுகிறான். மனிதன் இறைவனின் அருளைத் தன் வாழ்வில் குறிப்பாகச் செயல்பட (Super Grace) அனுமதித்தால் தன் திறமையால் முடிவில் பெறும் பலனை, முதலில் பெறுவான் என்கிறார் அன்னை. அதைச் செய்யும் முறையை விளக்குவதே அவர்களுடைய யோக நூல்கள். அதைச் செய்வது பகவானுடைய பூரண யோகம்.

## அன்னை இலக்கியம்

# உள்ளத் திருக்கோயில்

இல. சுந்தரி

கோரமான துர்தேவதைகளுக்கு அடிபணியும் பேதைமையிலிருந்து விடுபட்டால் மேலே உயர்வதற்கு வாய்ப்பு உண்டு. சிந்திக்கத் தெரிந்த மனிதர்கள் விடுதலை பெறும்போது சத்திய சக்திகளுக்குக் கருவிகளாகவும் தெய்வப் பணிகளுக்கு ஒத்துழைப்பவர்களாகவும் ஆகலாம்.

— ஸ்ரீ அன்னை

‘பாலா! என்னாயிற்று உனக்கு, ஏன் சோர்ந்து போயிருக்கிறாய்?’

‘வா கண்ணா. ஒரு செய்தி என்னைப் பெரிதும் பாதிக்கிறது. அதனால் மனம் சோர்வடைகிறது’.

‘என்ன செய்தி என்று சொல். உன் சோர்வைப் போக்க வழியுள்ளதா எனப் பார்ப்போம்’.

‘நீ இப்போதெல்லாம் ஆசிரமம் போவதில்லையே ஏன்?’

‘அதுவா? சமீபத்தில் ஒரு செய்தி கேள்விப்பட்டேன். ஸ்ரீ அன்னையவர்கள் தமக்குப் பிறகு அங்கு யோகம் செய்ய விரும்புபவர்களுக்குப் பாதுகாப்பிராது, எனவே, அவரவர் இருக்குமிடங்களிலிருந்தே செய்வது சரி என்று கூறியதாகவும், ஸ்ரீ அரவிந்தரும், ஆசிரமம் போன்ற ஸ்தாபனங்கள் ஸ்தாபித்தவர்களுக்குப் பிறகு மூடப்பட வேண்டும் என்று கூறியிருப்பதாகவும் ஒரு செய்தி கேள்விப்பட்டேன். அதனால் அங்குப் போவதை விட்டுவிட்டு வீட்டிலும் தியான மையங்களிலும் தியானம் செய்கிறேன்’.

‘என்னால் உன்னைப் போல் இருக்க முடியவில்லை. அங்குப் போகவில்லையென்றால் எனக்குப் புகலிடம் ஏது?’

‘ஒன்றை சிந்தித்துப் பார் பாலா. அன்னையும் பகவானும் அனந்தமானவர்கள். அவர்கள் தங்களை மானுட வரம்புக்குள் உட்படுத்திக் கொண்டு அங்கிருந்தார்கள். அவர்கள் சாந்நித்யம் அங்கு வலுவான சூழலை உருவாக்கியிருந்தது உண்மை. ஆனால் அவர்கள் தம் மானுட வரம்பைத் தகர்த்தெறிந்துவிட்டு



பிரபஞ்சம் முழுதும் வியாபித்த பிறகு நாம் எங்கும் அவர்களை உணர முயற்சி செய்யலாமே’.

‘இல்லை கண்ணா. பசுவின் உடல் முழுதும் பரவியுள்ள உதிரம் அதன் மடியில்தானே பாலாய்ச் சுரக்கிறது? கோவில்கள் அதுபோன்ற இறை வெளிப்பாட்டின் இடங்களல்லவா?’

‘ஆம். அது சூழலின் புனிதத்தைப் பொறுத்துதான் அமையும். தீச்செயல்கள் மலிந்து விட்ட இடங்களில் அதாவது மனத் தூய்மையின்றி வக்ர குணங்களுக்கு வக்காலத்து வாங்குவோர் மலிந்த இடங்களில் இறை சக்தி விலகும் என்பதை நீ கேள்விப்பட்டதில்லையா? பக்தனின் பக்தியும், பவித்ரமும்தான் சூழலை உருவாக்கும். அன்னையவர்கள் தம் அனுபவமாக ஒன்றைக் கூறியுள்ளார்கள். அவர் பிரான்ஸில் ஒரு தேவாலயத்திற்குச் சென்றிருந்தபோது கலைக் கண்ணோட்டத்தில் உன்னதமான ஒரு படைப்பாக இருந்த அதன் கருவறையில் பிராணமய உலகைச் சார்ந்த கன்னங்கரிய பெரிய சிலந்தி ஒன்றிருந்ததாம். பக்தர்களின் விழிமிய உணர்வுகளையும், பிரார்த்தனைகளையும் அது உண்டு கொண்டிருந்ததாம்’.

‘யாருக்கு இறுமாப்பு இருக்குமோ அவர்களுக்குத்தான் தன்னைத் துதிப்பது பிடிக்குமாம். தன்னலமற்ற உண்மையான இறையார்வமும், ஆன்மீக உவகையும்தான் கடவுளர் மதிப்பது என்கிறார் அன்னை. இவ்வளவு எதற்கு? அன்னை மகாசமாதி அடைந்தபோது, ஓரன்பர் வானில் ஒரு பெரிய ஒளிப்பந்து பல நூறு சுக்கல்களாகச் சிதறி எல்லா இதயங்களுள்ளும் புகுந்ததைக் கண்டார் என நாம் படிக்கவில்லையா? எங்கும் நிறை பரம்பொருளல்லவா பகவானும் அன்னையும். அது மட்டுமல்ல. ஸ்ரீ அரவிந்தரே ஆரம்ப காலத்தில் கோவிலுக்குப் போவதைச் சம்பிரதாயமாகக் கொள்ளாமல், இறைவன் இருப்பது உண்மையானால் நான் அவனை நேருக்கு நேர் காண வேண்டும். அவன் நமக்குள்ளே இருப்பதாக இந்துமதம் கூறுகிறது. அவனை உள்ளே காணும் வழியையும் அது கூறியுள்ளது. எப்படியும் நான் அதைக் காண்பேன் என்றும் அது உண்மை என்பதற்கான ஆதாரங்களையும் நான் கண்டேன்

என்கிறார். ஸ்ரீ அன்னையும் எனக்கு வயது 25 ஆகும்போது என்னுள் குடிகொண்டிருந்த அந்தரங்கக் கடவுளை நான் கண்டறிந்தேன் என்கிறார்'.

'நீ இப்போது எனக்கு ஒரு சந்தேகத்தை ஏற்படுத்திவிட்டாய். அவர்கள்தாம் எங்கும் நிறை பரம்பொருள் என்றாய். தம்முள் கடவுளைக் கண்டனர் என்கிறாய். அவர்களே ஏன் அவர்களைக் காண வேண்டும்'.

'உண்மையில் இறைவன் தன்னையே தன்னிலிருந்து புற நிலைப்படுத்திப் பார்த்ததுதான் சிருஷ்டி. இங்கு இவர்கள் நமக்கு வழிகாட்ட நம்மிடையே மானுடமாய் வந்தவர்கள். அவர்களைப் பற்றிய சூட்சுமம் அவர்களே அறிவார்கள். ஆதலால் நமக்குத் தம்மை உணர்த்தவே அவ்வாறு செய்தார்கள் என்று கொள்ள வேண்டும். குரங்கு குல்லாய் போட்ட கதைதான் நம் கதை'.

'நீ என்ன சொல்ல வருகிறாய்? ஆசிரமம் போகாமலேயே அவர்களை வழிபடலாம் என்கிறாயா?'

'அன்னையே என்ன சொல்லியிருக்கிறார்? ''ஏன் என்னை வழிபட வேண்டும். நீங்களே நானாகலாமே'' என்றல்லவா கூறியுள்ளார்'.

'ஆம். அது சாமான்யனான எனக்குப் பொருந்தாது. நான் இப்போதுதான் நீரில் காலை நனைக்கிறேன். இறங்கி மூழ்கக் கற்றுக் கொண்ட பிறகல்லவா நீச்சலடிக்க வேண்டும். இப்போது எனக்கு ஆழ்ந்து அன்னையை நினைக்க சூழல் வேண்டும்'.

'தியான மையங்கள் இருக்கின்றனவே. அவை ஆசிரமத்தின் சிறுவடிவம் என்று குருநாதர் கூறவில்லையா?'

'அதுவும் சரிதான். ஆனால் இங்கு அருகில் தியான மையம் ஏதுமில்லை. என் வேலை நெருக்கடியில் வெளியூர் சென்று வரவும் இயலவில்லை'.

'சரி, உனக்குச் சூழல்தானே வேண்டும். வீட்டிலேயே ஓரிடத்தைத் தேர்வு செய்து தவறாது ஒரு குறிப்பிட்ட நேரம்



அன்னையைத் தியானித்தால் அது அன்னை பகவான் சூழலைப் பெற்றுவிடும்'.

'அதுவும் சரியான யோசனைதான். சந்தைக் கடை போன்ற இந்த வீட்டில் (கூட்டுக் குடும்பத்தில்) எந்த இடத்தைத் தேர்வு செய்வேன்?'

'சமர்ப்பணம் செய். அன்னையே இடத்தைக் காட்டுவார்'.

இவ்வாறு நண்பன் கூறிக்கொண்டிருக்கும் போதே என் அண்ணன் மகள் சிறுமி புவனா ஓடி வந்தாள். நாங்கள் பேசியது எதுவும் அவளுக்குத் தெரியாது.

''சித்தப்பா! நீ அன்னையை நினைத்து கண்ணை மூடி உட்காருவாய் அல்லவா? அதற்கு நானொரு இடம் கண்டுபிடித்து விட்டேன்'' என்றாள். எனக்கு உடம்பு சிலிர்த்தது. நண்பனோ விழிகள் விரிய என்னைப் பார்த்தான்.

'குழந்தை தெய்வமல்லவா? அவள் சொல்வதைக் கேள் என்றான். அவள் என் கையைப்பிடித்து இழுத்துக்கொண்டு போய் வீட்டின் நடு முற்றத்தில் ஒரு சிறிய பாயை விரித்து வைத்திருந்தாள் அதில் என்னை உட்கார வைத்துவிட்டு, கண்ணை மூடிக்கொள், இப்படி உட்கார் என்று சம்மணம் இட்டு அமர்ந்து கண்ணை மூடிக்கொண்டு ஓம் என்று தொடங்கி-விட்டாள். நான் பிரத்யட்சமாய் அவளில் அன்னையைத் தரிசித்தேன்'.

'அதன்பிறகு, இது ஒருவேளை தற்செயல் நிகழ்வா? அன்னையின் ஏற்பாடேவா? இதை நான் எப்படிப் புரிந்து கொள்வது?' என்றேன் நண்பனிடம்.

'அன்னையின் முத்திரை நடக்காதது நடப்பது. அதில் தெரிந்து கொள் உண்மையை' என்று கூறி அவன் பெறவந்த புத்தகத்தைப் பெற்றுக்கொண்டு போய்விட்டான்.

இருக்கட்டும் என்று குழந்தை குறிப்பிட்டுக் காட்டிய இடத்திலமர்ந்து கண்ணை மூடி அன்னையின் திருவடிகளை மனத்திரையில் கொண்டுவந்து 'அம்மா! நீயே எனக்கு உன்னைக் காட்டியருள்' என்று இறைஞ்சினேன்.

பாலா! என்று அறிமுகமான குரல், நட்பும் உரிமையும் கொண்டாடும் குரல் என் செவிகளைத் தீண்டியது. கண்ணைத் திறந்து பார்த்தேன். அருண் என் நண்பன் நின்று கொண்டிருந்தான். இவன் எப்படி வந்தான்? என்னால் நம்ப முடியவில்லை. காரணம், சில தினங்களுக்கு முன்பு இவனுடன் எனக்குக் கருத்து வேறுபாடு முற்றி சண்டையாகிவிட்டது. இனி உன்னைப் பார்க்க வரவும் மாட்டேன், பேசவும் மாட்டேன் என்று கடுமையாய்க் கூறிப் பிரிந்து விட்டான். முன்தினம் பார்த்தபோதுகூட வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டு உன்னோடு எவன் பேசுவான் என்ற தோரணையில் போனவன் இன்று வீடு தேடி வந்து அழைக்கிறான். திரைப்படங்கள், நாடகங்களில்கூட சுமுகத்தை மட்டும் விரும்பிச் சந்தோஷப்படும் குணம் எனக்கு. என் நண்பன் திரும்பி வந்தது உள்ளே மனம் மலர்ந்தது.

‘சாரி பாலா! என்னை மன்னித்துவிடு. நடந்தவற்றை மறந்து விடுவோம். வா. லைப்ரரி போவோம்’ என்றான். இந்தா இதை வாங்கிக்கொள் என்று எனக்குப் பிடித்த ‘காட்பரீஸ் சாக்லெட்டை’ வேறு நீட்டினான். சுமுகம் மலர்ந்தவுடன் எனக்குப் புதுத் தெம்பும் மகிழ்வும் வந்தது. இதுதான் அன்னையின் வரவோ என்று எண்ணும் போதே, இவன் என் நண்பன், நல்லவன், மனம் மாறி வந்து விட்டான், இது சகஜம்தானே என்று மனம் வக்கிரம் பேசியது.

நடக்க முடியாதது நடந்தால் அதுவல்லவா அன்னையின் வெளிப்பாடு என்று நான் எண்ணிக் கொண்டிருந்த போதே, அடாவடிக்காரன் என்று ஊரே கொண்டாடும் உத்தமன் (இது வஞ்சப்புகழ்ச்சி) ராசு பரபரப்பாய் வந்தான். இவன் எங்கு வந்தாலும் நல்லது நடக்காது. அடாவடி செய்வான். வம்பும் வழக்கும் வரும். இல்லாத அதிகாரத்தைப் பயன்படுத்தி என்-போன்ற இளிச்சவாயர்களை நோக வைப்பான். ஒருமுறை இவன், பிரேக் இல்லாத வண்டியை விபத்தில்லாமல் ஓட்டுவேன் என்று அவன் நண்பனிடம் சவால்விட்டு எதிரே வந்த என் வண்டியில் மோதிவிட, இருவரும் விழுந்தோம். என்



வண்டியின் முகப்பு விளக்கு, கண்ணாடியாவும் உடைந்து-விட்டது. மனம் நொந்தது! பார்த்து வரக் கூடாதா?’ என்றேன் சினத்தை அடக்கிக் கொண்டு. அவனோ, பிரேக் இல்லாத வண்டியில் வந்தேன். பார்த்து வந்தால் மட்டும் என்னாகும்? என் அதிர்ஷடம் யார் மீதாவது மோதாமல் உன்மீது மோதினேன் என்று சிறிதும் குற்றவுணர்வின்றி, மன்னிப்பும் கேட்காமல் பேசினான். நான் அவனோடு சண்டையிட விரும்பாமல் பொறுத்துக் கொண்டு வந்து விட்டேன். அந்தச் செயல் என் உள்ளிருந்து உறுத்திய உறுத்தலை மறக்கப் பெரும் பாடுபட்டேன். இந்நிலையில் இவன் எதற்கு வருகிறான்? வம்பனாயிற்றே என்று கலக்கம் எழ தியான இடத்தைவிட்டு அகலாமல் ‘அன்னையே இங்கு எழுந்தருள்’ என்று வேண்டிய வண்ணம் அவனைப் பார்த்தேன். நம்பவே முடியாதபடி கைகூப்பி ‘‘மன்னிச்சிடுங்க தம்பி. என் தப்பை மனசில வைக்காதீங்க. என் புள்ளைக்கு ஒடம்பு சரியில்ல. ஒங்க வண்டியைத் தந்து ஒதவுங்க. கண்ணாடியை உடைத்த நஷ்டத்தை நான் தந்துடறேன்’’ என்றான் பணிவாக. பெரும் அதிகார தோரணையுள்ள அடாவடிக்காரன். அவன் நினைத்திருந்தால் பணக்கார வையாபுரியை மிரட்டிக் கார் கேட்டிருப்பான். ஆனால் அவன் இப்படி என்னிடம் வந்து கெஞ்சுவது நம்ப முடியாததாயிருந்தது. ‘மதர்! இது நீதான், நீயேதான். சுமுகம் நீயல்லவா! திருவுருமாற்றம் உன் வழியல்லவா’ என்றது மனம்.

‘தாராளமா என் வண்டியை எடுத்துப் போ ராசு, இந்தா சாவி’ என்றேன்.

‘ரொம்ப நன்றி தம்பி’ என்று சென்றான்.

‘அவனிடம் போய் வண்டியைக் கொடுத்தாயே. ஏதாவது சொல்லி அனுப்பியிருக்கக் கூடாதா’ என்றனர் வீட்டார்.

அன்னையைப் பற்றியே அறியாத இவர்களுக்குத் திருவுருமாற்றம் எங்கே தெரியப் போகிறது. அவன் என் வண்டிக்குப் புதிய விளக்கும், கண்ணாடியும் பொருத்தி ஒர்க் ஷாப்பில் (**Workshop**) சரி செய்து புத்தம் புது வண்டியைப்

போல் ஆக்கிக் கொண்டு விட்டுவிட்டு, ‘‘தம்பி ஒங்க ஒதவிய மறக்க மாட்டேன்’ என்று நன்றியும் கூறிப் போனான். யாவர்க்கும் ஒரே ஆச்சர்யம். ராசுவா இப்படி மாறி விட்டான்? என்றனர்.

என்னிடத்தில் அன்னை எழுந்தருளினார். எனக்குள் நான் கேட்ட வினாக்களுக்கு விடை கிடைத்துவிட்டது. அவர்களுக்கு அது தெரிய வாய்ப்பில்லை. பிறகென்ன? ஆசிரமம் போகவில்லையே என்ற குறை விலகி எனக்குள்ளேயே அன்னை தரிசனம் காண வழி கிடைத்துவிட்டது. நீங்களும் இதைப் பின்பற்றலாம் என்று சொல்லத் தோன்றுகிறது. அதிகப்பிரசங்கி என்று நீங்கள் கூறுவதும் எனக்குக் கேட்கிறது.

(முற்றும்)

## ஜீவிய மணி

*குறை கூறக்கூடாது என்பது நல்ல குணம். ஆனால் குறை கூறாமலிருப்பது ஒரு யோகப் பயிற்சியாகும். பிறர் மனம் புண்படக்கூடாது என்று குறை கூறாமலிருப்பது நல்ல மனித குணம். குறை சொல்லும் பொழுது என்ன நம் மனதில் நடக்கிறது. குறை சொல்லாமலிருந்தால் மனம் எப்படி மாறுகிறது என்று தெரிந்துகொண்டு, குறை சொல்லாமலிருப்பதன் ஆன்மிகப் பலன் கருதி குறை சொல்லாமலிருப்பது யோகப் பயிற்சி. யோகச் சட்டப்படி ஒருவர்மீது குறை சொன்னால், அவரைத் திருத்தும் வாய்ப்பை நாமிழந்து விடுகிறோம். குறை சொல்லாமலிருந்தால் அவர் திருந்தும் வாய்ப்பு அதிகம்.*

**நம்மைச் சுற்றியுள்ளவர் குறைகளை எல்லாம் கவனித்து, புரிந்து கொண்டு, அவற்றை நம் அகவுணர்வின் மாற்றத்தின் மூலம் விலக்க முற்பட்டு வெற்றி காண்பது யோகப் பயிற்சியில் உயர்ந்த நிலை.**

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Pappammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# சமர்ப்பணம்

சமர்ப்பணம் தவறுவதில்லை. தொடர்ந்து சமர்ப்பணம் தவறாமல் பலிக்கும்பொழுது நம்பிக்கை சமர்ப்பணத்தின்மீது எழுவதற்குப் பதிலாக ‘‘நான் செய்யும் சமர்ப்பணம் தவறாது’’ என்று மாறுவதுண்டு. அப்படி மாறினால் ‘‘நான்’’ முக்கியமாவதால் சமர்ப்பணம் தவறும். என்ன செய்வது? சமர்ப்பணம் செய்யும் ஆர்வத்தைச் சமர்ப்பணம் செய்ய வேண்டும். அதனால் ‘‘நான்’’ விலகி மீண்டும் சமர்ப்பணம் உயிர் பெறும். விவசாய அன்பரின் சமர்ப்பணம் பவர்கட் விஷயமாகப் பலிக்கவில்லை. 8 மணி பவர்கட் சமர்ப்பணத்திற்கு அசையவில்லை. எதிராக 10 மணி 12 மணி ஆயிற்று. அவர் சமர்ப்பணம் செய்வதை விட்டு ‘‘நான்’’ என்பதை விட்டு அகல முயன்றார். எதுவும் பலனில்லை. சில நாட்கள் சென்று பக்கத்து ஊருக்கு பாக்டரி வருவதால் 24 மணி பவர் சப்ளை பாக்டரிக்கு ஆர்டர் ஆகியது. அது தண்ணீர் சம்பந்தமான பாக்டரி. ஏராளமான தண்ணீர் பாக்டரியிலிருந்து வெளி வரும். இதன் விளைவாக

1) அத்தண்ணீர் விவசாயத்திற்கு இனாமாக வந்தது.
2) அவர்கள் பயிரிடும் பொருள்களை வாங்கும் ஏற்பாடும் வந்தது.
3) நிலம் விலை உயர்ந்தது.

ஆனால் பவர்கட் போகவில்லை. பவர்கட்டால் வந்த பிரச்சனைகள் தீர்ந்தன. ‘‘நான் சமர்ப்பணம் செய்கிறேன். என் சமர்ப்பணம் தவறாது’’ என்ற மனநிலை மாறும்வரை சமர்ப்பணத்தைத் தொடர்ந்து

‘‘நான்’’ சமர்ப்பணமானால்

பவர்கட்டும் முழுமையாக விலகும்.
சமர்ப்பணம் தவறாது. சமர்ப்பணம் செய்யும் மனிதன் தவறுவான்.
மனிதன் ‘‘நான்’’ என்ற அகந்தை.

# எரிச்சல்

Non-reaction என்பதை எரிச்சல்படாத மனநிலை எனக் கூறலாம். 11 ஆண்டுகள் ஜீவனற்ற சர்வதேச ஸ்தாபனத் தலைவரின் எதேச்சாதிகாரத்திற்கு ஆளானவர் எரிச்சல்பட மறுத்ததால் கடந்த 11 ஆண்டுகள் சாதிக்காததை அந்த ஸ்தாபனம் 3 ஆண்டுகளில் சாதித்தது. எரிச்சல் படாமலிருந்தால் முடியாதது எனக் கருதியதும் முடியும் எனக் காணலாம்.

திருமணமான 18 ஆண்டுகட்குப்பின் தன் தங்கை திருமணத்தை கணவன் ஆட்சேபித்து வேறொரு மணமகனை அவள் மணக்க வேண்டும் என நிர்ப்பந்தம் செய்து, மனைவியையும், அவள் தங்கை, தேர்ந்தெடுத்த புது மணமகனையும் அனைவரையும் திட்டினார். மாமியாரையும் கடிந்து பேசினார். மறுநாள் காலையில் மனைவி அவர் வீட்டை விட்டுத் தாய் வீட்டிற்குப் போக வேண்டும் எனக் களேபரம் செய்தவரின் சொற்கள் களேபரத்தை விடக் கசப்பானவை. தவறான சொற்கள், அவதூறு, மனைவி அவமானப்பட்டாள். அவருக்குப் பதில் கூற முடியாது. என்ன செய்வது என அறியாதவள் Non-reaction எரிச்சல்படாமலிருக்க முடிவு செய்து தூங்கப் போனாள்.

எதுவும் முடியாத நேரம் எதையும் சாதிக்கலாம் என அவள் அறிவாள். ஆனால் அந்த நேரம் எதையும் நினைக்க முடியவில்லை. அன்பர்கள் இதுபோன்ற நேரத்தில் அன்னை அடியோடு மறந்து போவதை அறிவார்கள். தூக்கம் இதுபோன்ற நேரம் வராது.

மறுநாள் கணவன் மனைவியிடம் அமைதியாகப் பேசினார். குரலும் தொனியும் மன்னிப்புக் கேட்பதாக அமைந்தது. ‘‘நான்’’ தவறு என்றார். மனைவியே ஏற்பாட்டை ஏற்றுக் கொள்ள அனுமதித்து, அதற்கு உதவி செய்வதாகக் கூறினார்.

மனைவிக்கு வியப்பு. இது ஓர் அதிசயம்.